இந்நூல், இந்தியாவிலுள்ள மூலை முடுக்கெங்கும் ஒலித்தன. பஜனைகளிலும், கச்சேரி மேடைகளிலும், ஹரிகதை, கீர்த்தன், நாடக அரங்கு, நடன அரங்கு, போன்ற பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டன. பண்டிதர்களும், பாமரர்களும் இந்த அஷ்டபதிகளை ரசித்தனர். இந்தக் காவியம் ஜீவாத்தும — பரமாத்தும தத்துவத்தை போதிக்கின்றது. இதை ராதை - கிருஷ்ணன் என்ற பாத்திரங்கள் மூலம் படைத்திருப்பதால் சைவ சமயத்துக் கவிஞர்களின் உள்ளங்கள் ராதையின் பாத்திரத்தில் பார்வதியையும் கண்ணனுடைய பாத்திரத்தில் சிவபெருமானையும் பாட்டுடைத் தலைவி — தலைவனாக வைத்துப்பார்க்க எண்ணின. இதைப்போலவே ராம பக்தர்களும் ராதையின் பாத்திரத்தில் ஸீதையையும்—கண்ணன் பாத்திரத்தில் ராமனையும் பாட்டுடைத் தலைவன் — தலைவியாகக் கொண்டு காவியம் எழுதத் தலைப் பட்டனர். இந்து மதம் மட்டுமல்லாது சமணமதக் கவிஞர்களின் உள்ளமும் கீத கோவிந்தம் போல பாடத் தலைப்பட்டன. அவர்களும் இந்தக் காவியம்

போல யாத்தனர். இதனால் பல காவியங்கள் சம்ஸ்கிருத இலக்கிய உலகில் தோன்றலாயின. இவற்றில் சில அச்சுக்கு வந்துள்ளன. ஆயின் பல அச்சுக்கு வராமல் சுவடிகளாகவே இருக்கின்றன. கீதகோவிந்தத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்த வழிநூல்கள் :—

1. **कृष्णविजय काव्य:** ஸ்ரீமுஷ்ணம் கௌண்டிந்ய வீரவல்லி ஸ்ரீநிவாஸாச்சாரியார் என்பவரால் இயற்றப்பெற்றுள்ளது.

2. **गीतगौरीश काव्यः** அல்லது **गीतगौरीपति** — இந்த நூல் பத்து ஸர்கங்களைக் கொண்டது. இந்த நூலையியற்றிய கவிஞர் பெயர்: பானுதத்தன்.

3. **गीतदिगम्बरम् :** இது இசை நாடகம். இந்த நூலில் இடையிடையே வசனமும், இசையும் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. கி. பி. 1655ம் ஆண்டில் இயற்றப்பெற்ற நூல். இதை இயற்றிய ஆசிரியரின் பெயர் 'வம்சமணி'. இவர் மிதிலை நாட்டைச்சேர்ந்த பிராமண குலத்தில் தோன்றிய ஸ்ரீராமச்சந்திரகவியின் மகன். இந்த நூல் கீதகோவிந்தத்தைத் தழுவி எழுதியுள்ளபோதிலும் நாடக அமைப்பை இன்னும் சற்று அதிகமாக விரிவாக்கியுள்ளார். உதாரணமாக ப்ரஸ்தாவனம், சூத்ரதாரன் போன்ற அமைப்புகள் அதிகம்.

4. **गीतदामोदरम्** — இந்நூலை இயற்றியவரின் பெயர் 'சம்பூர்ண'.

5. **गीतमुकुन्दम्** — இந்நூலை இயற்றியவரின் பெயர் 'கமலலோசன'.

6. **गीतराघव काव्यम्** — இந்தநூல் கி. பி. 1674ல் தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஆசிரியர் பெயர் 'ப்ரபாகர்'. இவரது தந்தையின் பெயர் பூதரன்.

7. **गीत राघवम्** அல்லது **रामाष्टपदी** — இந்த நூலை 'ராமகவி' என்பவர் இயற்றியுள்ளார்.

8. **गीतराघव काव्यम्** — இந்த நூல் ஏழு ஸர்க்கங்களைக்கொண்டது. இதன் ஆசிரியர் 'ஹரிசங்கரன்'.

9. **गीतरास:** — இந்த நூலை 'லக்ஷ்மண ஸோமயாஜின்' என்பவர் இயற்றியுள்ளார். இந்நூலைப் பற்றிய குறிப்பை இவருடைய மற்றொரு நூலான 'ஸீதாராம விஹார காவியம்' என்ற நூலில் காணப்படுகிறது.

10. **गीतवीतराग:** அல்லது **बाहुबलिस्वामि अष्टपदी** — இந்த நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. இதை இயற்றிய ஆசிரியரின் பெயர் 'அபிநவ சாருகீர்த்தி பண்டிதாசார்யார்'. இவர் ஸிம்மபுரத்தைச் சேர்ந்தவர். கி. பி. 1265ல் வாழ்ந்தவர். இது அச்சாகாமல் இருக்கிறது.

11. **गीतशंकर काव्यम्** — இதன் ஆசிரியர் அநந்த நாராயணகவி. இவர் 'பஞ்சரத்னகவி' என்று தன்னுடைய பெயரைக் கூறிக்கொள்கிறார். இவரது பெற்றோர்களின் பெயர்கள்: ம்ருத்யுஞ்சயர், ப்ருஹதம்பா என்று குறித்துள்ளார். இந்த நூல்நிலையத்தில் (D. No. 10951 - Burnell's No. 6661) உள்ளது. இவர் முதல் சரபோஜி (A. D. 1711) யின் அரசவைக் கவிஞர்.

12. **गीतशंकर काव्यम्** — இதன் ஆசிரியர் மிதிலை நாட்டைச் சேர்ந்த அந்தணர் குலத்தில் தோன்றியவர். 'பீஷ்ம மிஶ்ர'; 'ஹைரகவி' என்னும் பெயர்களையுடையவர்.

13. **गीतसीतापति काव्यम्** — 'அச்சுதராய மாடிக்' என்பவரால் இயற்றப்பட்டது. இவருடைய மற்றொரு நூலான 'ஸாஹித்ய ஸாரவ்யாக்யா' என்னும் நூலில் இதனைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

14. **गीतसुन्दरम्** — இந்த நூலை இயற்றியவர் 'ஸதாசிவ தீக்ஷிதர்'. இவர் 'சொக்கநாத மகின்' என்ற புலவரிடம் பயின்றவர். இந்த நூல் மதுரை நாயகன் சுந்தரேசப் பெருமானுடைய 64 திருவிளையாடல்களைக் குறித்து எழுந்த காவியம். இதுவும் அஷ்டபதியைப் பின்பற்றி மீனாட்சி-சுந்தரேசனைத் தலைவன்-தலைவியாகவைத்து எழுதிய காப்பியம். இந்த நூல் 18ம் நூற்றாண்டில் எழுதியது. இந்த நூலகத்தில் உள்ள ஒரே ஒரு காகிதச் சுவடி (D. No. 10950; Burnell's No. 6560). இந்த நூல் அச்சானது.

15. **गीतगिरीश:** — இதை இயற்றியவர் 'ராமகவி' இவர் ஸ்ரீநாதன் என்பவரின் புதல்வர். இந்த நூலுக்கு 'அனந்தராமன்' என்பவர் எழுதிய உரையொன்றுள்ளது.

16. **संगीत माधवम्** — இதன் ஆசிரியர் 'கோவிந்ததாஸர்'. இவர் கி. பி. 1537—1612-ல் வாழ்ந்தவர். இவரது மற்றொரு நூல் **कृष्णामृतम्**

17. **कृष्णगीयम्** — இதன் ஆசிரியர் 'ஸோமநாதகவி'. இந்த நூல் பம்பாயில் அச்சாகியுள்ளது.

18. **गीतगंगाधर काव्यम्** — இதன் ஆசிரியர் कल्यानम्

19. **रामोदाहरण गीतिकाव्यम्** — ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

20. **शिवाष्टपदि** — இதன் ஆசிரியர் 'வேங்கடப்ப நாயகர்'. இவர் கி. பி. 1582—1629 வரை மைசூரை ஆண்ட மன்னர்.

21. **गीतशतकम्** — இதன் ஆசிரியர் 'சுந்தராசார்யார்'. இந்த நூல் பம்பாயில் அச்சாகியுள்ளது.

22. **संगीत रघुनन्दन** — இதன் ஆசிரியர் 'விஸ்வநாதகவி'.

23. **शंकरी संगीतम्** — ஆசிரியர் 'ஜயநாராயணகவி'. இவர் கிருஷ்ணசந்திர கவியின் மகன். இந்த நூல் 12 ஸர்கமும், சிவ-பார்வதி கல்யாணம்பற்றிக் கூறுகிறது.

இங்ஙனம் கீதகோவிந்தத்தைப் பின்பற்றி பலநூல்கள் யாக்கப்பெற்றுள்ளன. ஆகவே மிகைக்கு அஞ்சி ஏனைய நூல்களை எழுதவில்லை. காலஞ் செல்லச்செல்ல இறைவனைத் தலைவனாகவும், இறைவியைத் தலைவியாகவும் வைத்துப்பாடிய கவிஞர்கள், மன்னனைத் தலைவனாகவைத்துப் பாடினார்கள். 'திருவுடைமன்னனைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்று ஆழ்வார் அனுபவித்ததுபோல இருக்கலாம். இதற்கு எடுத்துக்காட்டாக ஷாஹவிலாஸகீதம் (**शाहविलाश गीतम्** D.No. 10957 - Burnell's No 6562); ஷாஹஜிராஜ அஷ்டபதி (**शाहजीराजाष्टपदी** D. No. 10959 - Burnell's No. 10303) என்னும் நூலைக் கூறலாம். கி. பி. 1684—1710-ம் நூற்றாண்டில் வாழ்ந்து அரசோச்சிய மராட்டிய மன்னன் 'ஷாஜி'யைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடினார் 'டுண்டிவியாஸர்' என்னும் கவி. இவர் மன்னன் ஷாஜியின் அரசவைக் கவிஞர். **शाहविलासगीतम्** என்னும் இந்த நூலை இவர் இயற்றியதால் இவருக்கு **अभिनयजयदेव** என்ற பட்டமும் பெற்றதாக அறியமுடிகிறது.

மேலும், இக்கவிஞர்கள் ஜயதேவரைப்பற்றியே, பாத்திரங்களின் சந்தர்பங்கள், அவர்களுடைய நிலை முதலியவற்றை ஸ்லோகங்களாக இயற்றி வாசகர்கள் பாத்திரங்களின் அமைப்பையும், அவர்களது மனோநிலையையும்

புரிந்துகொள்ள வைத்தபிறகு அஷ்டபதிகளை இயற்றியிருக்கின்றனர். இதனால் கீதங்கள் இயற்றப்பட்ட சமயத்தையும், பாத்திரங்களின் மனநிலையையும் நன்கு அறியமுடிகிறது. மேலும் சில பதப்ரயோகங்களையும், கருத்துக்களையும் இயற்கை வர்ணனைகளையும் அப்படியே எடுத்துத் தனது காவியங்களில் எடுத்தாண்டுள்ளனர். ஜயதேவர் இயற்றியது போலவே 24 அஷ்டபதிகளையும், சிலர் 20 அஷ்டபதிகளையும் சிலர் 22 அஷ்டபதிகளையும் பாடியுள்ளனர். தலைவன் தோழியிடம் கூறுவது, தோழி தலைவனிடம் கூறுவதுபோன்ற பகுதிகளை ஜயதேவர் எந்த அஷ்டபதியில் பாடியுள்ளாரோ அதே எண்ணுள்ள அஷ்டபதியிலேயே சிலர் இயற்றியுள்ளார்கள். உதாரணமாக :—

கீதகோவிந்தத்தின் 9-வது அஷ்டபதியில் கண்ணனைப்பிரிந்த ராதை அவனுடைய பிரிவினால் துன்பப்படுவதாக ராதையின் தோழி கண்ணனிடம் கூறுவதுபோல், ராதையின் பிரிவாற்றாமையைக்குறித்து கவிஞர் கூறுகிறார் :

स्तनविनिहितमपि हारमुदारम् ।
सा मनुते कृश तनुरिव भारम् ।
राधिका तव विरहे केशव ॥ १ ॥ (ध्रु)

सरसमसृणमपि मलयजपङ्कम् ।
पश्यति विषमिव वपुषि सशङ्कम् ॥ २ ॥

स्वसित पवनं अनुपमपरिणाहम् ।
मदन दहनमिव वहति सदाहम् ॥ ३ ॥

दिशि दिशि किरति सजलकण जालम् ।
नयन नलिनमिव विगलित नालम् ॥ ४ ॥

हरिरिति हरिरिति जपति सकामम् ।
विरहविहित मरणेन निकामम् ॥ ७ ॥

श्रीजयदेव भणितमिति गीतम् ।
सुखयतु केशव पदमुपनीतम् ॥ ८ ॥

இதே நிலையில் பார்வதியின் தோழி சிவபெருமானிடம் வந்து 'பார்வதி உங்கள் பிரிவினால் வருந்துகிறாள்' என்று கூறுகிறாள். இந்த அஷ்டபதியும் 9-வது அஷ்டபதியாக **गीतशंकरम्** என்ற நூலில் கவிஞர் கூறுகிறார். இதில் சிலபதங்களும், பொதுவான கருத்துக்களும் ஜயதேவரை நமக்கு ஞாபகப் படுத்துகின்றன.

॥ श्लोकः ॥

योगमास्थाय तिष्टन्तं शंकरं लोक शंकरम् ।
प्राप्यगौरी सखी प्राह तदवस्थामिमां क्रमात् ॥

॥ अष्टपदी ॥

ध्यायति सीदति विलपति विततम् ।
गायति तवगुणगणमपि सततम ।
देवगृहे मुह्यतिगौरी तापमिता ॥ १ ॥ (ध्रु)

मुञ्चति नयन जलं बहुविमलम् ।
सिञ्चति मुहुरूरू कंचुक पटलम् ॥ २ ॥

रोदति लीला कलह विलापा ।
छादित मदन विलासज तापा ॥ ७ ॥

पञ्चरत्नकवि कल्पित गीतम् ।
सोमशेखर मुदेस्तु सुगीतम् ॥ ८ ॥

இயற்கை வர்ணனை

இயற்கை வர்ணனையிலும் ஜயதேவருடைய சொல்லாட்சியும், கருத்தும் மிளிர்கின்றன.

அஷ்டபதி - 3

गीतगोविन्दे :–

ललितलवङ्गलतापरि शीलन
कोमलमलय समीरे ।
मधुकर निकर करम्बित कोकिल
कूजित कुञ्जकुटीरे ॥

गीतशंकरे :–

मलयानिलरथ कीर तुरंगम
कूजित कोकिल शाली ।
मधुकर संजित पुष्प शरासन
योजित सुमनो माली ॥

இறைவனின் அவதாரங்கள்

மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றியும், அந்தந்த அவதாரங்களின் முக்கியத்தும் பற்றி முதல் அஷ்டபதியில் கூறுகிறார் ஜயதேவர்.

प्रलय पयोधिजले धृतवानसि वेदं
विहित वहित्र चरित्रमखेदम् ।
केशव धृत मीन शरीर जय जगदीश हरे ॥

இங்ஙனம் பத்து அவதாரங்கள் தோன்றுவதற்குரிய முக்கியமான காரணங்களைக் கூறுகிறார்.

ஆனால், சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து இயற்றும் போது சிவபெருமான் என்றுமே அவதரிக்கவில்லை. ஆனால் அவதாரம்

செய்யாமலேயே முக்கியமான பல செயல்களை ஆவிர்பவித்துச் செய்து இருக்கிறன். இவற்றில் மிகச் சிறந்த செயல்களை எடுத்து வியந்தோதுகின்றார் சிவகீதி மாலிகா (**शिवगीति मालिका**) ஆசிரியர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்,

कनक सभा सदने वदनेरहासं ।
नटसि विधाय सुधाकर भासं ।
शंकर धृत तापसरूप जय भवताप हर ॥

என்று தொடங்கி பாற்கடல் கடைந்தபோது ஆலாலம் உண்டு திருநீலகண்ட கண்டனுக ஆன செயல்; (2) திரிபுர ஸம்ஹாரம் (3) மன்மதனை அழித்தது (4) பிக்ஷாடன திருக்கோலங்கொண்டது (5) சேதுவில் ராமன், சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தது (6) காசியில் இறப்போருக்குச் சிவபெருமான் தாரக நாமம் கூறி முக்திப்பேற்றை அளிப்பது; (7) கச்சபாவதாரமெடுத்த விஷ்ணு காஞ்சியில் சிவபெருமானைப் பூசித்து சுயரூபம் கொண்டது (8) சங்கரரால் பூஜிக்கப்பட்டதும், காஞ்சி மடத்தில் சந்திரசேகரனுக இருந்து உலகை பரிபாலிப்பது (9) சந்திரனைத் தலையில் தரித்துக் கொண்டது முதலிய செய்திகளை எடுத்து வியந்தோதுகிறார். இறுதியில்

श्रीविधु मौळियतेरिदमुदितमुदारं ।
श्रृणुकरुणाभरणाखिलसारं ।
शङ्करारुण शैलमहेश ।
जयभवताप हर ॥

என்று தமது முத்திரையையும் பதித்துள்ளார் ஆசிரியர். இந்த ஆசிரியர் காஞ்சி மடத்தின் பீடாதிபதியாக இருந்தவர்.

ஆக, ஜயதேவருடைய 'கீத கோவிந்த மஹா காவ்யம்' ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் ஒரு மாபெரும் கிளர்ச்சியை உருவாக்கியுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூலைப் பின்பற்றி பல வழிநூல்கள் உருவாகியுள்ளதே இதற்குச் சான்று.

துணை நூற்பட்டியல் :

1. *கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.*

2. New Catalogus Catalogorum. Uuiversity of Madras.

3. History of Classical Sanskrit Literature
by Dr. M. Krishnamachariyar, T. T. Devastanam. Tirupati.

4. Maha Bhaktha Vijayam in Marathi
by Mahipati. Ed. R. K. Pingevar. Bombay.

5. T. M. S. S. M. Library - Sanskrit Manscripts Nos. Dr. Burnell
Nos. 6660, 6661, 6662, 10303, 12287.

श्रीः

॥ अपामार्जनस्तोत्रम् ॥

सम्पादकः – सु. स्वामिनाथशास्त्री ॥

॥ श्री लक्ष्मी नृसिंहाय नमः ॥

अथातस्संप्रवक्ष्यामि अपामार्जनमुत्तमं ।
पुलस्त्येन यथा प्रोक्तं दाल्भ्यस्यैव तु योगिनः ॥ -१

सर्वेषां रोगदोषाणां नाशनं मङ्गलप्रदं ।

दाल्भ्य उवाच :-

भगवन्प्राणिनस्सर्वे विषरोगाद्युपद्रवैः ॥ -२

दुष्टग्रहोपघातैश्च सर्वकालमुपद्रुताः ।
आभिचारिककृत्या ये स्पर्शरोगैश्च दारुणैः ॥ -३

सदा संपीड्यमानास्ते तिष्ठन्ति मुनिसत्तम ।
येन कर्मविपाकेन विषरोगाद्युपद्रवाः ॥ -४

न भवन्ति नृणां तन्मे यथावद्वक्तुमर्हसि ।

पुलस्त्य उवाच :-

जनार्दनं भूतपतिं जगद्गुरुं स्मरन्मनुष्यस्सकलं महामुने ।
दुष्टानशेषानपहन्तिसद्यःसर्वाणि कार्याणि च यान्यभीप्सितानि ॥ -५

मातृकाङ्कः :— ८८२२ / २०७१३.

व्रतोपवासैर्यैर्विष्णुर्नान्यजन्मनि तोषितः ।
ते नरा मुनिशार्दूल ग्रहरोगादिभागिनः ॥ -६

यैर्न तत्प्रवणं चित्तं सर्वदैव नरैः कृतं ।
विषग्रहज्वराणां ते मनुष्या दाल्भ्य भागिनः ॥ -७

आरोग्यं परमामृद्धिं मनसा यद्यदिच्छति ।
तत्तदाप्नोति(त्य)सन्दिग्धं परत्राच्युततोषकृत् ॥ -८

नाधिं प्राप्नोति न व्याधीन्नविषग्रहबन्धनं ।
कृत्या स्पर्शभयं वापि तोषिते मधुसूदने ॥ -९

सर्वदुष्टा समास्तस्य सौम्यास्तस्य सदाग्रहाः ।
देवानामप्रधृष्योऽसौ तुष्टो यस्य जनार्दनः ॥ -१०

यः समः सर्वभूतेषु यथात्मनि तथा परे ।
उपवासादिना येन तोषिते मधुसूदने ॥ -११

तोषितास्तस्य जायन्ते नराः पूर्णमनोरथाः ।
अरोगाः सुखिनो भोगान् भोक्तारो मुनिसत्तम ॥ -१२

न तेषां शत्रवो नैव स्पर्शरोगाभिचारिकं ।
ग्रहारोगादिकं वापि पापकार्यं न जायते ॥ -१३

अव्याहतानि कृष्णस्य चक्रादीन्यायुधानि च ।
रक्षन्ति सकलापद्भ्यो येन विष्णुरुपासितः ॥ -१४

दाल्भ्य उवाच :-

अनाराधितगोविन्दास्ते(ये) नरा दुःखभागिनः ।
तेषां दुःखाभिभूतानां कर्तव्यं यद्दयालुभिः ॥ -१५

पश्यद्भिस्सर्वभूतस्थं वासुदेवं महामुने ।
समदृष्ट्या हृषीकेशं तन्मे ब्रूहि विशेषतः ॥ -१६

पुलस्त्य उवाच :-

तद्वक्ष्यामि मुनिश्रेष्ठ समाहितमना शृणु ।
रोगदोषाशुभहरं चिरं पापविनाशनं ॥ -१७

विरिञ्चिना सहोत्पन्नः परमेष्ठी निसर्गजः ।
नुदन्सर्वाणि पापानि दर्भः स्वस्तिकरो मम ॥ -१८

सौवर्णं रजतं ताम्रं मृण्मयं वा दृढं नवं ।
अव्रणं कलशं शुद्धं स्थापयेत्तण्डुलोपरि ॥ -१९

तदोदकं समानीय शुद्धं निर्मलमेव च ।
कलशं पूरयेत्सद्यः तेन शुद्धेन वारिणा ॥ -२०

एकशतकुशान्साग्रान्स्थापयेत्कलशोपरि ।
कुशमूले स्थितो ब्रह्मा कुशमध्ये जनार्दनः ॥ -२१

कुशाग्रे शंकरं विद्यात्त्रयो देवाः कुशस्थिताः ।
गृहीत्वा तु समूलाग्रान्कुशान्शुद्धानुपस्पृशेत् ॥ -२२

मार्जयेत्सर्वगात्राणि कुशाग्रैर्दाल्भ्य शान्तिकृत् ।
शरीरे यस्य तिष्ठन्ति कुशोत्था जलबिन्दवः ॥ -२३

नश्यन्ति तस्य पापानि गरुडेनेव पन्नगाः ।
विष्णुभक्तो बिशेषेण शुचिस्तद्गतमानसः ॥ -२४

रोगग्रहविषार्तानां कुर्याच्छान्तिमिमां शुभाम् ।
वाराहं नारसिंहञ्च वामनं विष्णुमेव च ॥ -२५

ध्यात्वा समाहितो भूत्वा दिक्षु नामानि विन्यसेत् ।
नारसिंहं समभ्यर्च्य शुचौ देशे कुशासने ॥ -२६

मन्त्रैरेतैर्यथालिंगं कुर्याद्दिग्बन्धमादृतः ।
एवं कृत्वा तु दिग्बन्धं विष्णुं सर्वत्र संस्मरन् ॥ -२७

अव्यग्रचित्तः कुर्वीत न्यासकर्म यथाविधि ।
पूर्वे नारायणः पातु वारिजाक्षस्तु दक्षिणे ॥ -२८

प्रद्युम्नः पश्चिमायां तु वासुदेवः तथोत्तरे ।
ईशान्यां वामनः पातु आग्नेय्यां तु जनार्दनः ॥ -२९

नैरृत्यां पद्मनाभस्तु वायव्यां चैव माधवः ।
ऊर्ध्वं गोवर्धनधरो ह्यधस्तात्तु त्रिविक्रमः ॥ -३०

एताभ्यो दशदिग्भ्यस्तु सर्वतः पातु केशवः ।
जले रक्षतु वाराहः स्थले रक्षतु वामनः ॥ -६१

अटव्यां नारसिंहश्च सर्वतः पातु केशवः ।
अंगुष्ठाग्रे तु गोविन्दं तर्जन्यां तु महीधरं ॥ -३२

मध्यमायां हृषीकेशं अनामिक्यां त्रिविक्रमम् ।
कनिष्ठिक्यां न्यसेद्विष्णुं करमध्ये तु माधवं ॥ -३३

एवं न्यासं पुरा कृत्वा पश्चादंगेषुविन्यसेत् ।
शिखायां केशवं न्यस्य मूर्ध्नि नारायणं न्यसेत् ॥ -३४

माधवं च ललाटे च गोविन्दं तु भ्रुवोर्न्यसेत् ।
चक्षुर्मध्ये न्यसेद्विष्णुं श्रोत्रयोर्मधुसूदनं ॥ -३५

त्रिविक्रमं कपोले तु वामनं कर्णमूलयोः ।
नासारन्ध्रद्वये चैव श्रीधरं कल्पयेद्बुधः ॥ -३६

दामोदरं दन्तपङ्क्तौ वाराहं चुबुके न्यसेत् ।
उत्तरोष्ठे हृषीकेशं पद्मनाभं तथाधरे ॥ -३७

जिह्वायां वासुदेवञ्च तालुके गरुडध्वजम् ।
वैकुण्ठं कण्ठमध्ये तु अनन्तं नासिकोपरि ॥ -३८

दक्षिणे तु भुजे विष्णुं विन्यसेत्पुरुषोत्तमं ।
वामे भुजे महायोगं माधवं हृदि विन्यसेत् ॥ -३९

करे च दक्षिणे पार्श्वे ततः संकर्षणं न्यसेत् ।
वामे रिपुहरं विद्यात् कटिमध्येऽपराजितं ॥ -४०

पृष्ठे क्षितिधरं विद्यादच्युतं स्कन्दयोर्द्वयोः ।
वक्षस्थले माधवञ्च कक्षयोर्भोगशायिनं ॥ -४१

जठरे देवदेवेशं स्तनयोः पीतवाससम् ।
कुक्षौ पृथ्वीधरं चैव पार्श्वयोः केशवं न्यसेत् ॥ -४२

पीतांबरं सर्वतनौ हरिं नाभ्यां तु विन्यसेत् ।
अन्तरे विन्यसेद्विद्वान् वासुदेवं गुदेऽव्ययं ॥ -४३

स्वायंभुवं मेढ्रमध्ये ऊर्वोश्चैव गदाधरम् ।
चक्रिणं जानुमध्ये च जंघयोरच्युतं न्यसेत् ॥ -४४

गुल्फयोर्नारसिंहञ्च पादपृष्ठेऽमितौजसं ।
श्रीधरं चांगुलीषु स्यात् पद्माक्षं सर्वसन्धिषु ॥ -४५

नखेषु माधवं चैव न्यसेत्पादतलेऽच्युतम् ।
रोमकूपे गुडाकेशं कृष्णं रक्तास्थिमज्जसु ॥ -४६

अच्युतानन्तगोविन्दं वातपित्तकफादिष ।
मनोबुद्धिरहंकारे चित्ते चैव जनार्दनं ॥ -४७

आपादमस्तकेचैव विन्यसेत्पुरुषोत्तमम् ।
एवं न्यासविधिं कृत्वा यत्कार्यं शृणु तद्द्विज ॥ -४८

पादमूले तु देवस्य शंखं तत्रैव विन्यसेत् ।
वनमालां हृदिन्यस्य सर्वदेवादिपूजितं ॥ -४९

गदां वक्षस्थले चैव चक्रं चैव तु पृष्ठतः ।
श्रीवत्साङ्कं शिरो न्यस्य पंचांगं च कचे न्यसेत् ॥
एवं न्यासविधिं कृत्वा पश्चान्मन्त्रं नियोजयेत् ॥ -५०

ओं नमो भगवते सर्वक्लेशापहर्त्रे — हृदयाय नमः ।
,, शिरसे स्वाहा ।
,, शिखायै वषट् ।
,, कवचाय हुम् ।
,, नेत्रत्रयाय वौषट् ।

नृसिंहाय - हृदयाय नमः । कमलकिंजल्कपीतनिर्मलवाससे शिरसे स्वाहा । केशवादि चक्रिणे शिखायै वषट् । दामोदराय देवाय — कवचाय हुं । ऋग्यजुस्सामरूपाय नेत्रत्रयाय वौषट् । ओं नमः पुरुषोत्तमाय अस्त्राय फट् । (पूर्भुवस्सुवरोम् - इति दिग्बन्धः)

एवं न्यासविधिं कृत्वा साक्षान्नारायणो भवेत् ।
तनुर्विष्णुमपीतस्य (तनुं विष्णोरपीतस्य) यावत्किंचिन्नभाषते ॥ -५१

य इदं विन्यसेन्न्यासं प्राप्नोति हृदि संस्थितम् ।
अभयं सर्वलोकेभ्यो विष्णुलोकं स गच्छति ॥ -५२

विष्णुरूर्ध्वमधोरक्षेद्वैकुण्ठोऽपि दिशोदश ।
पातु मां सर्वतो रामो धन्वी चक्री च केशवः ॥ -५३

अपामार्जनकोन्यासः सर्वव्याधिविनाशनः ।
आत्मनश्च परस्यापि विधिरेष उदाहृतः ॥ -५४

अपामार्जनस्तोत्रमालामन्त्रस्य - पुलस्त्य ऋषिः - वाराहो वामनो नृसिंहो विष्णुर्देवता । अनुष्टुप्छन्दः । अच्युतानन्त गोविन्देति शक्तिः । हरामुकस्य दुरित इति बीजं । तप्तहाटककेशान्तेति कीलकं । ज्वलत्पावकलोचनेति वेधकं । वज्राधिक नखस्पर्शेति व्यापकं । हा हा हूं हूं, फट् इत्यस्त्रं । श्री विष्णुप्रीत्यर्थे सर्वक्लेशनिवृत्यर्थे सर्वरोगोपशान्त्यर्थे सर्वपापक्षयार्थे जपे विनियोगः ।

बालाग्रमात्रं (बालं मुरारिं) हृदयस्य मध्ये विश्वेदेवं जातवेदसं वरेण्यं ।
ये चात्मनः परं पश्यन्ति धीरास्तेषां शान्तिः शाश्वती नेतरेषम् ॥ -१

अथध्यानं :-

अथ ध्यानं प्रवक्ष्यामि सर्वपापप्रणाशनं ।
वराहरूपिणं देवं संस्मरन्नर्चयेज्जपेत् ॥ -२

बृहत्तनुं बृहद्गात्रं बृहद्दंष्ट्रं सुशोभितं ।
समस्तैर्वेदवेदांगैर्युक्तं वै भूषणैर्वृतम् ॥ -३

उद्धृत्य भूमिं पातालाद्धस्ताभ्यामुपगृह्य तं ।
आलिंग्य भूमिं शिरसा मूर्ध्नि जिघ्नन्त (धरन्त) मच्युतम् ॥ -४

रत्नवैडूर्यमुक्तादिभूषणैरुपशोभितं ।
पीतांबरधरं देवं शुक्लमाल्यानुलेपनम् ॥ -५

त्रयस्त्रिंशादिभिर्देवैस्तूययमानं दिवानिशं ।
ऋषिभिर्सनकाद्यैश्च स्तूयमानं दिवानिशम् ॥ -६

नृत्यद्भिरप्सरोभिश्च स्तूयमानश्च किन्नरैः ।
इत्थं ध्यात्वा यथात्मानं जपेन्नित्यमतन्द्रितः ॥ -७

सुवर्णमण्डपान्तस्थं पद्मं ध्यायेत्सकेसरम् ।
सकर्णिकदलैः पत्रैः अष्टभिः परिशोभितं ॥ -८

कलङ्करहितं देवं पूर्णचन्द्रसमप्रभम् ।
तडित्समत(स)टाशोभि कण्ठनालेन शोभितं ॥ -९

श्रीवत्सांकितवक्षस्थं तीक्ष्णदंष्ट्रं भयंकरं ।
जपाकुसुमसंकाशं रक्तहस्ततलान्वितम् ॥ -१०

पद्मासनसमारूढं योगपीठसमाश्रितं ।
पीतवस्त्रपरीधानं शुक्लवस्त्रोत्तरीयकं ॥ -११

कटिसूत्रेण हैमेन नूपुरेण विराजितं ।
वनमालादिशोभाढ्यं मुक्ताहारोपशोभितम् ॥ -१२

सपंकजं चतुर्हस्तं तत्प्रख्यातसुलोचनं ।
प्रातःसूर्यसमप्रख्यं कुण्डलाभ्यां विराजितं ॥ -१३

अनेकसूर्यसंकाशं मुकुटाटोपमस्तकम् ।
केयूरकान्तिसंस्पर्धिमुद्रिकारत्नशोभितम् ॥ -१४

जानूपरिन्यस्तकरद्वन्द्वरक्तनखाङ्कितं ।
(रक्ता)भरण संस्पर्धि शुण्डादण्डकरद्विषम् ॥ -१५

चतुर्भिश्चन्द्रसंकाशैः सुदंष्ट्रमुखपंकजं (सुदंष्ट्रै रूपशोभितम्) ।
अतिरक्तोष्ठवदनं व्यक्तास्यमतिभीषणम् ॥ -१६

वामाङ्कस्थश्रियायुक्तं शान्तिदामङ्करोहिणां ।
अर्हणीयां सुरूपाञ्च सुनासां शुभलक्षणाम् ॥ -१७

सुभ्रूं सुवेषां सुश्रोणीं सुभुजां सुन्दराननां ।
सुप्रतिष्ठाञ्च सुदतीं चतुर्हस्तां विचिन्तयेत् ॥ -१८

दुकूलेन च चार्वङ्गीं हरिणीं सर्वकामदां ।
तप्तकाञ्चनसंकाशां सर्वाभरणभूषिताम् ॥ -१९

सुवर्णकलशोत्प्रेक्षपीनोन्नतपयोधरां ।
गृहीतबाहुलिङ्गाभ्यामुद्वाहुभ्यामथान्ययोः ॥ -२०

गृहीतपद्मयुगलां जांबूनदकरां तथा ।
एवं देवीं नृसिंहस्य वामांकोपरि संस्मरेत् ॥ -२१

देवं च कर्णिकामध्ये काम्ये नित्ये च कर्मणि ।
अभ्रश्यामः शुभ्रयज्ञोपवीती - सत्कौपीनः पीतकृष्णाजिनश्रीः ॥
छत्री दण्डी पुण्डरीकायताक्षः - पायाद्देवो वामनो ब्रह्मचारी ॥ -२२

अतिसुविमलगात्रं रुक्मपात्रस्थमन्नं
सुललितदधिखण्डं पाणिना दक्षिणेन ।
कलशममृतपूर्णं वामहस्ते दधानं
तरति सकलदुःखाद्वामनं भावयेद्यः ॥ -२३

नीलोत्पलदलश्यामं पीतांबरधरं हरिं ।
शंखचक्रगदाहस्तं ध्यात्वाऽपामार्जनं जपेत् ॥ -२४

ओं नमः परमार्थाय पुरुषाय महात्मने ।
अरूपबहुरूपाय व्यापिने परमात्मने ॥ -२५

निष्कल्मषाय शुद्धाय ध्यातृपापहराय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -२६

सच्चिदानन्दरूपाय योगिने परमात्मने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -२७

गोविन्दपद्मनाभाय वासुदेवाय भूभृते ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -२८

त्रिविक्रमाय रामाय वैकुण्ठाय नराय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -२९

हृषीकेशाय कूर्माय माधवायाच्युताय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३०

योगीश्वराय रुढाय (रुद्राय) योगिने परमात्मने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३१

हिरण्यगर्भरूपाय हिरण्यकशिपुच्छिदे ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३२

चक्रहस्ताय देवाय पद्मपत्रेक्षणाय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३३

भक्तप्रियाय विभवे विष्वक्सेनाय शार्ङ्गिणे ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३४

दैत्यारये उपेन्द्राय भूतानां जीवनाय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३५

विष्ठरश्रवसे तस्मै क्षीरांभोनिधिशायिने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३६

अधोक्षजाय भद्राय श्रीधराय महात्मने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३७

जनार्दनाय कृष्णाय उपेन्द्रश्रीधराय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३८

प्रद्युम्नायानिरुद्धाय नमस्संकर्षणाय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -३९

कृष्णाय वासुदेवाय हरये परमात्मने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४०

नारायणाय विश्वाय विश्वेशायेश्वराय च ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४१

अधोक्षजाय तार्क्ष्याय मत्स्याय कूर्मरूपिणे ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४२

दामोदराय देवाय अनन्ताय महात्मने ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४३

गदिने चक्रहस्ताय पद्महस्ताय ते नमः ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४४

नारसिंह्म महोग्रेश तस्मै तुभ्यं नमो नमः ।
नमस्कृत्वा प्रवक्ष्यामि यत्तत्सिध्यतु मे वचः ॥ -४५

वराह नरसिंहेश वामनेश त्रिविक्रिम ।
हयग्रीवेश सर्वेश हृषीकेश हराशुभम् ॥ -४६

अपराजितचक्राद्यैश्चतुर्भिः परमायुधैः ।
अखण्डितानुभावैस्त्वं सर्वदुःखहरो भव ॥ -४७

हरामुकस्य दुरितं दुष्कृतं दुरुपोषितं ।
मृत्युबाधार्तिभयदं दुरिष्ठ(त)स्य च यत्फलम् ॥ -४८

परापद्ध्यानसहितप्रयुक्तं चाभिचारिकं ।
गरस्पर्शमहारोगप्रयोगं जरयाजर ॥ -४९

हरये वासुदेवाय नमः कृष्णायशार्ङ्गिणे ।
नमः पुष्करनेत्राय केशवायादिचक्रिणे ॥ -५०

दंष्ट्रोद्धृतक्षितिभृते त्रिमूर्तिपतये नमः ।
महायज्ञवराहाय शेषभोगोरुशायिने ॥ -५१

तप्तहाटककेशान्तज्वलत्पावकलोचन ।
वज्राधिकनखस्पर्शदिव्यसिंह नमोस्तुते ॥ -५२

कश्यपायादिहूस्वाय ऋग्यजुस्सामरूपिणे ।
तुभ्यं वामनरूपाय क्रमते गां नमो नमः ॥ -५३

वराहाशेषदुष्टानि सर्वपापफलानि वै ।
मर्द मर्द महादंष्ट्र मर्द मर्द महीधर ॥ -५४

नरसिह्म करालास्य दन्तपंक्तिनखोज्वल ।
भञ्ज भञ्ज निनादेन दुष्टान्यस्यार्तिनाशन ॥ -५५

ऋग्यजुस्सामगर्भाभिर्वाग्भिर्वामनरूपधृक् ।
प्रशम सर्वदुःखानि नयत्वाशु जनार्दन ॥ -५६

अस्य श्री ज्वरमन्त्रस्य कालाग्निऋषिर्महादेवो देवता । अनुष्टुप्छन्दः । सर्वज्वरशान्त्यर्थे जपे विनियोगः ।

त्रिपाद्भस्मप्रहरणः त्रिशिरा रक्तलोचनः ।
स मे प्रीतस्सुखं दद्यात्सर्वामयपतिज्वरः ॥ -५७

आद्यन्तकवयः पुराणाः सूक्ष्मा बृहन्तो ह्यनुशासितारः ।
सर्वान्ज्वरान्घ्नन्तु ममानिरुद्धप्रद्युम्नसंकर्षणवासुदेवाः ॥ -५८

ओं भस्मासुराय विद्महे वक्रदंष्ट्राय धीमहि । तन्नो ज्वरः प्रचोदयात् ॥

अंगवङ्गकलिङ्गेषु सौराष्ट्रे मगधेषु च ।
वाराणस्यां तु यज्जातं तत्तत्स्मरसि वैश्वर (वेज्वर) ॥ -५९

एकाहिकं द्व्याहिकञ्च तथा त्रिदिवसज्वरं ।
चातुर्थिकं तथात्युग्रं तथैव सततज्वरम् ॥ -६०

देषोत्थं सन्निपातोत्थं तथैवागन्तुकज्वरं ।
शमं नयाशु गोविन्द छिन्धि छिन्ध्याशु वेदनाम् ॥ -६१

नेत्रदुःखं शिरो दुःखं दुःखं चोदरसंभवं ।
अनाश्वासमतिश्वासं परितापं सवेपथुम् ॥ -६२

गुदघ्राणांघ्रिरोगांश्च कुष्ठरोगं तथा क्षयं ।
श्वित्रादीन्नखजान्रोगान्त्वगन्तस्थबहिस्स्थितान् ॥ -६३

कामलादीन्तथारोगान्प्रमेहांश्चातिदारुणान् ।
भगन्दरातिसारांश्च मुखरोगांश्चवल्गुमीन् ॥ -६४

अश्मरीमूत्रकृच्छ्रांश्च रोगानन्यांश्च दारुणान् ।
ये वातप्रभवा रोगा ये च पित्तसमुद्भवाः ॥ -६५

कफोद्भवाश्च ये केचिद्ये चान्ये सांन्निपातिकाः ।
आगन्तुकाश्च ये चान्ये लूता विस्फोटकादयः ॥ -६६

ते सर्वे प्रशमं यान्तु वासुदेवापमार्जिताः ।
विलयं यान्तु ते सर्वे विष्णोरुच्चारणेन तु ॥ -६७

क्षयं गच्छन्त्वशेषाश्च ते चक्राभिहता हरेः ।
अच्युतानन्तगोविन्द मन्त्रमष्टाक्षरं पदम् ॥ -६८

ओं नमः संपुटीकृत्वा जपं नियममास्थितः ।
अच्युतेति मनःपूतं अनन्तेति वचःपुनः ॥ -६९

गोविन्देति तनुः पूतात्वज्ञातज्ञातपातकैः (कात्) ।
अच्युतानन्तगोविन्द नामोच्चारणभेषजात् ॥ -७०

नश्यन्ति सकलारोगा सत्यं सत्यं वदाम्यहं ।
सत्यं सत्यं पुनस्सत्यं उद्धृत्य भुजमुच्यते ॥ -७१

वेदशास्त्रात्परं नास्ति न देवः केशवात्परः ।
स्थावरं जंगमं वापि कृत्रिमं चापि यद्विषम् ॥ -७२

दन्तोद्भूतं नखोद्भूतमाकाशप्रभवं विषं ।
लूतादि प्रभवं यच्च विषमत्यन्तंदुःखदम् ॥ -७३

शमनं नयतु तत्सर्वं कीर्तितोऽसौ जनार्दनः ।
ग्रहान्प्रेतग्रहांश्चैव तथैव डाकिनी ग्रहान् ॥ -७४

वेतालांश्च पिशाचांश्च गन्धर्वान्यक्षराक्षसान् ।
शाकिनीपूतनाद्यांश्च तथा वैनायकग्रहान् ॥ -७५

मुखमण्ढलिकान्मारीन्रेवतीन्वृद्धरेवतीन् ।
वृद्धकाख्यांस्तथा चोग्रान्तथामातृग्रहानपि ॥ -७६

बालस्य विष्णोश्चरितं हरतु बालग्रहानिमान् ।
वृद्धानां ये ग्रहाः केचिद्ये च बालग्रहाः क्वचित् ॥ -७७

नरसिंहस्य ते दृष्ठ्या दग्धा ये चापि यौवने ।
सटाकरालवदनो नारसिंहो महाबलः ॥ -७८

ग्रहानशेषान्निश्शेषान्करोतु जगतो हि सः ।
नरसिंह महासिंह .... ज्वालाननः ॥ -७९

ग्रहानशेषान्निश्शेषान् खाद खादाग्निलोचन ।
अनीश देवदेवेश धनुग्रहविमोक्षणात् ॥ -८०

ये रोगा ये महोत्पाता ये द्विषन्तो महाग्रहाः ।
यानि च क्रूरभूतानि प्राणिपीडाकराणि वै ॥ -८१

शस्त्रक्षते च ये रोगा ज्वालागर्दभकादयः ।
यानि चात्यन्त दुःखानि ग्रहपीडाश्च दारुणाः ॥ -८२

तानि सर्वाणि सर्वात्मा परमात्मा जनार्दनः ।
कंचिद्भूतं समुत्थाप्य वासुदेवाशु नाशय ॥ -८३

क्षिप्त्वा सुदर्शनं चक्रं ज्वालमालाग्निभीषणं ।
सर्वदुष्टप्रशमनं कुरु देववराच्युत ॥ -८४

सुदर्शनमहाज्वाल छिन्धि छिन्धि महारव ।
सुदर्शनमहाचक्र गोविन्दस्य करायुध ॥ -८५

ज्वलत्पावकसंकाश सूर्यकोटिसमप्रभ ।
त्रैलोक्यरक्षां कर्तुं त्वं दुष्टदानवदारणे ॥ -८६

तीक्ष्णधार महावेध छिन्धि छिन्धि महाज्वरं ।
छिन्धि छिन्धि महाव्याधीन् छिन्धि छिन्धि महाग्रहान् ॥ -८७

छिन्धि वातश्च शूलश्च छिन्धि घोरमहाविषं ।
रुजं दाहं च शूलं च निमिषज्वाल गर्दभं ॥ -८८

चक्राय स्वाहा - हृदयाय नमः ॥ विचक्राय स्वाहा - शिरसे स्वाहा ॥ सुचक्राय स्वाहा शिखायै वषट् ॥ त्रैलोक्य चक्राय स्वाहा - कवचाय हुं ॥ असुरान्तकचक्राय स्वाहा नेत्रत्रयाय वौषट् ॥ गोविन्दस्य करायुधचक्राय स्वाहा - अस्त्राय फट् (भूर्भुवस्सुवरों इति दिग्बन्धः)

अस्य सुदर्शन मन्त्रस्य अहिर्बुध्न्यऋषिः । त्रिष्टुप्छन्दः । सुदर्शनो देवता । सुदर्शनमन्त्र-जपे विनियोगः । ओं हा हुं हुं फट्कारेण हन हन द्विषः । सुदर्शनमन्त्रेण ग्रहा यान्तु दिशो दश । ओं नमो भगवते भो भो सुदर्शन दुष्टं दारय दारय दुरितं हर हर पापं मथ मथ आरोग्यं कुरु कुरु हन हन द्विषः ॥

त्रैलोक्यरक्षां कर्तुं त्वं आज्ञापय जनार्दन ।
सर्वदुष्टानि रक्षांसि क्षयं यान्तु विभीषण ॥ -८९

प्राच्यां दिशि प्रतीच्यां च दक्षिणे चोत्तरे तथा ।
रक्षां करोतु भगवान्क्रोधरूपजनार्दनः ॥ -९०

व्याघ्रसिंहवराहेभ्यो वह्निचोरभयेषु च ।
रक्षां करोतु सर्वात्मा नरसिंहः स्वगर्जितैः ॥ -९१

भुव्यन्तरिक्षे च तथा पार्श्वतःपृष्ठतोऽग्रतः ।
रक्षां करोतु भगवान् बहुरूपी जनार्दनः ॥ -९२

यथा विष्णुर्जगत्सर्वं सदेवासुरमानुषं ।
तेन सत्येन सकलं दुष्टमस्य प्रशाम्यतु ॥ -९३

यथा विष्णौ स्मृते सद्यः संक्षयं याति पातकं ।
तेन सत्येन सकलं दुष्टमस्य प्रशाम्यतु ॥ -९४

परमात्मा यथा विष्णुर्वेदान्तेष्वपि गीयते ।
तेन सत्येन सकलं दुष्टमस्य प्रशाम्यतु ॥ -९५

यथा योगेश्वरो विष्णुर्वेदेष्वपि च गीयते ।
तेन सत्येन सकलं दुष्टमस्य प्रशाम्यतु ॥ -९६

शान्तिरस्तु शिवश्चास्तु प्रणश्यत्वसुखं च यत् ।
वासुदेवशरीरोत्थैः कुशैः संमार्जितं मया ॥ -९७

अपामार्जितगोविन्दो नरोनारायणस्तथा ।
ममास्तु सर्वदुःखानां प्रशमो वचनाद्धरेः ॥ -९८

शान्ता समस्ता रोगास्ते ग्रहाः सर्वे विषाणि च ।
भूतानि प्रशमं यान्तु संस्मृते मधुसूदने ॥ -९९

एतत्समस्तरोगेषु भूतग्रहभयेषु च ।
अपामार्जनकं शस्त्रं विष्णोर्नामाभिमन्त्रितम् ॥ -१००

एते कुशा विष्णुशरीरसंभवा जनार्दनोऽहं स्वयमेव चागतः ।
हतं मया दुष्टमशेषमस्य स्वस्थो भवत्वेष यथा वचो हरेः ॥ -१०१

शान्तिरस्तु शिवंचास्तु दुष्टमस्य प्रशाम्यतु ।
यदस्य दुरितं किञ्चित्क्षिप्तं लवणमर्णवे ॥ -१०२

स्वास्थ्यमस्य सदैवास्तु हृषीकेशस्य कीर्तनात् ।
यत एवागतं पापं तत्रैव प्रतिगच्छतु ॥ -१०३

एतद्रोगादिपीडासु जन्तूनां हितमिच्छता ।
विष्णुभक्तेन कर्तव्यं अपामार्जनकं परम् ॥ -१०४

अनेन सर्वदुःखानि शमं यान्ति न संशयः ।
सर्वभूतहितार्थाय यश्च कुर्यात्सदैव हि ॥ -१०५

य इदं धारयेद्विद्वान्भक्तिभावसमन्वितः ।
ग्रहास्तंनोपगच्छन्ति न रोगा न च रक्षसाः ॥ -१०६

धन्यो यशस्यः शत्रुघ्नः स्तवोऽयं मुनिसत्तम ।
पठतां शृण्वतां चैव ददाति परमां गतिम् ॥ -१०७

॥ इति श्री विष्णुधर्मे पुलस्त्य दाल्भ्य संवादे

विष्णोःरहस्यं विष्णोरपामार्जनस्तोत्रं

संपूर्णम् ॥

॥ श्री कृष्णार्पणमस्तु ॥

உ

தமிழ் வாழ்க.

சரபோஜி மன்னரும், மருத்துவ நூல்களும்.

புலவர் **வீ. சொக்கலிங்கம்**
தமிழ்த்துறை, சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது
அற்றது போற்றி யுணின்" — குறள்—942.

"நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என்று இறைவனை வேண்டு கின்றார் இராமலிங்க வள்ளலார். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. அளவற்ற செல்வமுடைய ஒருவனுக்கும், ஒருசில நோய்கள் இருக்குமானால், அவனிடம், "நீ (நெல் அரிசிச்) சோறு உண்ணலாகாது. (கேழ்வரகுக்) கூழ்தான் சாப்பிடவேண்டும்" என்று கூறுவார் மருத்துவர். பெருஞ்செல்வம் இருந்தும் நோயின் காரணமாக அவன் நல்ல உணவு உட்கொள்ள முடியாது. அதனால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றார்கள். இதனை நன்குணர்ந்த தஞ்சை மாமன்னர் சத்திரபதி சரபோஜி அவர்கள், தனது "தனவந்திரி மகால்" என்னும் மருத்துவச்சாலையில், பல அனுபவம் மிக்க மருத்துவர்களைக்கொண்டு, தனது குடும்பத்திற்கும், பொதுமக்களுக்குமாக மருத்துவம் செய்யச் செய்தார்.

"தன்வந்திரி மகாலில்", அப்படிப்பட்ட சிறந்த மாமேதைகள்: கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சுப்பராயகவி, வேலாயுத வைத்தியர் (வாத்தியார்), முத்துசாமி தீட்சிதர், அய்யாக்கண்ணுபிள்ளை, சேதுபண்டிதர், வேங்கடபதி ஐயர், பரங்கிப்பேட்டை ஆப்பு வைத்தியர், கோபாலபிள்ளை, சிதம்பரம்பிள்ளை, இராமராவ், துமாள்ராவ், புருஷோத்தமர், ஐயாவையங்கார், சீத்தாராமய்யர், அண்ணுச்சாமி நாயக்கர், அம்பலவாணப்பிள்ளை, அப்புராவ், பாப்பு வைத்தியர், பொன்னம்பலம், நாயகம், சேக்குசாயபு, அக்கீம் நத்தர் சாயபு, ரங்கைய நாயக்கர், வெங்கடாசலம்பிள்ளை, அண்ணு சாமி வைத்தியர், அப்பண்ணு வைத்தியர், முத்துசாமி அப்பா, க்ஷேத்திர கோவிந்தராவ், சுப்பையா வஸ்தாத், வாசுதேவபிள்ளை, அபிராம மேஸ்திரி, தௌலத்து மால்ராவ், வட்டாத்து ஞானி, காதர்கான், ரஹீம்கான், அமீர்கான், ஹாஜி அகமத், மாமூசாகேப், சர்ஜன்பெல், சர்ஜன் கியூரி முதலானோர்களாவர். இப்பெயர்களைப் பார்க்கும்போது மன்னர் சரபோஜி, எவ்வளவு ஜாதி, மத, மொழி வேறுபாடற்றவர் என்பது புலனாகின்றது.

இவர்கள், மருத்துவம் பார்த்து, எளிதில் குணமான மருந்துகளையும், அவ்வப்போது எழுதிவந்தனர். பின்னர் அதனைச் செய்யுட்களாக்கி, சரபேந்திரர்தம் முத்திரையையும் சேர்த்துச் சுவடிகளாக்கி வைத்தனர். இவைகளே யன்றி, அரிய வைத்திய நூல்களையும் மிகவும் ஆர்வத்தோடு வாங்கிச் சேர்த்தார். அவைகள் பிறமொழிகளாயின், அவைகளை வழக்கு மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார்.

அவ்வாருனவைகளில் கி. பி. 1800-ம் ஆண்டு சனவரித் திங்களில் துவிபாஷி கிருஷ்ணப்ப நாயக்கரின் குமாரர் ரெங்கைய நாயக்கர் 'வைத்திய அட்டவணை'யையும், அதே ஆண்டு, பிப்ரவரித்திங்களில் 'பஸ்ம வகைகள்' என்ற நூலையும், அதே ஆண்டு, ஏப்ரலில் 'நானுவித ரோக சிகிச்சை' என்னும் நூலையும் எழுதினர். அதே ஆண்டு, டிசம்பரில் சுப்பராயர் என்பவரின் குமாரர் வெங்கடாசலம்பிள்ளை ஒரு 'வைத்திய அட்டவணை' எழுதினர்.

கி. பி. 1827-ம் ஆண்டு, சனவரித்திங்களில், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் 'க்ஷயரோக சிகிச்சை'யும், 'வாதரோக சிகிச்சை'யும், அதே ஆண்டு, டிசம்பர் திங்களில் 'குன்மரோக சிகிச்சை'யும் இயற்றினர்.

அதே ஆண்டு, வேலாயுத வைத்தியர், 'நயனரோக சிகிச்சை', 'ஜுரரோக சிகிச்சை, 'விரணம் கரப்பான் சிகிச்சை', 'சிரோரோக சிகிச்சை', விரேசன முறையும் அதிசார சிகிச்சையும்', 'மேகரோக சிகிச்சை', 'காசரோக சிகிச்சை' முதலானவைகளை இயற்றினர். திருவேங்கடம்பிள்ளை என்பார் 'கர்ப்பிணி பாலரோக சிகிச்சை'யை இயற்றினர். சுப்புராயக் கவிராயர் 'ஜுரரோக (வேறு) சிகிச்சை'யை இயற்றினர். கி. பி. 1816-ம் ஆண்டு, சூன் திங்களில் 'மூத்திரரோகம்' என்னும் நூலையும், 'அனுபோக வைத்திய அட்டவணை'யையும் இயற்றினர்.

கி. பி. 1824, ஜனவரியில் சிதம்பரம்பிள்ளையின் குமாரர் பஞ்சநதம் என்பவர் "மச்சமுனி பெருநூல்" என்னும் நூலை எழுதினர். அதே ஆண்டு, நவம்பரில் அரண்மனையின் புகழ் பெற்ற மருத்துவர், கொட்டியம் மத்தியஸ்தர் கோபாலபிள்ளை குமாரர் அய்யாக்கண்ணுபிள்ளை 'வைத்திய அட்டவணை' எழுதினர். மற்றும்பலர் பல நூல்களை எழுதியுள்ளனர்.

இவ்வாருன செய்திகட்குச் சான்றுகள்: எமது மகால் தமிழ் வைத்தியச் சுவடிகளினின்றும் காணக்கிடைக்கின்றன. தமிழ் வைத்தியச் சுவடி எண். 4, 'அகத்தியர் அறுநூறு' என்னும் நூலில், கடைசியில் கீழ்க்கண்டவாறு எழுதப் பட்டுள்ளது.

"சிவகிறுபை யுண்டாகவேணும். குருபாதமே துணை. இந்த சாத்திரம் வைத்தியம் 600. செகந்நாத வைத்தியர் குமாரர் அய்யாச்சாமி வைத்தியருடைய சுவடி பார்த்து எழுதினது. மேல்பிரதி ஆடிமீ 19-ம்வ சோமவாரம் அய்யாச்சாமி வாத்தியார் கையில்

கொடுத்துவிட்டது. இந்த சாத்திரம் எழுதினது வெங்கடேசப்பிள்ளை குமாரன் சுப்பராய பிள்ளை எழுதி முடித்தது முற்றும்.''

தமிழ் வைத்தியச் சுவடி எண். 15-a அகத்தியர் செந்தூரம் 300-ன் இறுதியில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

''சகாப்தம் 1722ஆ ரவுத்திரிஆ பங்குனிமீ 24உ ஆதித்த வாரமும் சத்தமி திதியும் மூல நட்சத்திரமும் கூடின சுபதினத்தில், ராசமானிய ஸ்ரீ சரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்த பிரகாரம், துபாசி கிஷ்ணம் நாயகர் குமாரர் ரெங்கப்ப நாயக்கர் அகஸ்திய சுவாமிகள் செந்தூர முந்நூறு எழுதி நிறைந்தது முற்றும். சிவமயம். பரபிரம்ம சொரூபானந்த மூர்த்தி துணை.''

இதன்படி, காணுங்கால், எழுதின நாள் 5—4—1801 என்று ஓரளவு தெரிகின்றது. அடுத்து ஷெ சுவடி எண். 16- 'அகத்தியர் கரிசல் 300'ன் நிறைவில் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது.

''சகாத்தம் 1722ஆ ரவுத்திரிஆ கார்த்திகைமீ 16உ சனிவாரமும் சதுர்த்தசியும், பரணி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில், ராசமானிய ஸ்ரீ சரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்தபடிக்கு, அகஸ்திய சுவாமி அருளிச்செய்த கரிசல், பஞ்சாதி முந்நூறு துபாசி கிஷ்ணம் நாயகர் குமாரன் ரெங்கப்ப நாயகர் எழுதி முகிந்தது முற்றும்'' என்பதாகும்.

இதன் படிநாள் 29—11—1800 ஆகும்.

சுவடி எண். 17 a 'அகத்தியர் பற்பமுறை 205'ன் இறுதியில்:

''சகாப்தம் 1722-ஆ ரவுத்திரிஆ மாசிமீ 25-ம் உ சுக்கிரவாரமும் அமரபட்சமும் ஷஷ்டியும் அனுஷ நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் ராசமானிய ஸ்ரீசரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்தபடி, துபாசிகிருஷ்ண நாயக்கர் குமாரன் ரெங்கய்யன், அகஸ்திய சுவாமிகள் வைத்தியநூல் பற்பமுறை இருநூற்றஞ்சு எழுதி நிறைந்தது முற்றும்.''

இதற்குச் சரியான நாள் 6—3—1801 ஆகும்.

சுவடி எண். 20, 'அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் 300'ன் இறுதியில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுளது.

''சாலியவாகன சகாப்தம் 1746 தாருண-ஆ மார்கழி-மீ 7உ சனி வாரமும் கூடின புண்ணிய தினத்தில், மகாராச-ஸ்ரீ சரபோஜி மகாராசா சத்திரபதி சாயபு அவர்களுக்கு வைத்தியம் கோபால பிள்ளை குமாரனாகிய கொட்டிய மத்தியஸ்தம் அய்யாக்கண்ணு பிள்ளை தன்னுடைய பேர் நிமித்த மாத்திரம், 'ரெத்தினச் சுருக்க'மென்னும் வைத்திய சாஸ்திரத்தை, அரண்மனை லேக்கிகளை (எழுதுகிறவர்களை)க்கொண்டு எழுதி நிறைவேறினதைச் செலுத்தி சாஷடாங்க விண்ணப்பம். ஸ்ரீயாதவ கோபால அரிபிரசன்னம்''

இதற்குச் சரியான நாள், 19—12—1824 ஆகும்.

இனி, சுவடி எண். 27, 'சட்டைமுனி வாதகாவியம் 1000'ன் முடிவில், அடியில் கண்டவாறு காணப்படுகின்றது.

"சகாப்தம் 1722-க்கு ரவுத்திரி-ஸு பங்குனி-மீ 20வ கிருஷ்ணபக்ஷம், திருதியை, செவ்வாய்க்கிழமை, சித்திரை நக்ஷத்திரம் கூடின சுபதினத்தில், ராசமானிய ஸ்ரீ சரபோஜி மகாராசா சாயேபு அவர்கள் ஆக்ஞாபிச்ச பிரகாரம், கலாசி கணக்கு, வெங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் 'கம்பிளிச்சட்டைக் கயிலாச நாயனுர் வாத நூல்' எழுதி நிறைந்தது முற்றும். குருவே துணை."

என்றுளது. இதற்குச் சரியான நாள் 31—3—1801 ஆகும்.

சுவடி எண். 30 'மச்சமுனி பெருநூல் ஜாலகாண்டம்-800' என்ற நூலின் நிறைவில், எதிர்வருமாறு எழுதப்பட்டுளது.

"சாலிவாகன சகாத்தம் 1746, தாரண-ஸு தை-மீ 20வயில் ஸ்ரீமகா-ா-ா-ஸ்ரீ சரபேந்திர மகாராசா சாயேபு அவர்கள் ஊழியன் சிதம்பர பிள்ளை குமாரன் பஞ்சனதம் எழுதிய மச்சமுனியெண்ணூறு பாடல்".

இதன் நாள் 31—1—1825 ஆகும்.

அடுத்து 32a-ல் இறுதியில் "மச்சமுனி சூத்திரம் ஆடக்கார அண்ணு எழுதினது" என்றுளது.

மேலும், சுவடி எண். 41- 'தன்வந்திரி வாகடம் 1510' என்னும் சுவடியின் முழுமையில், பின்வருமாறு காணப்படுகின்றது.

"சகாப்தம் 1722-ஸு ரவுத்திரி-ஸு கார்த்திக-மீ 2வ சனிக்கிழமை சதுர்த்தசியும் சுவாதி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராசமானிய ராசஸ்ரீ சரபோஜி மகாராசா சாயேபு அவர்கள் ஆக்ஞாபிச்ச படிக்கு வேங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் தன்வந்திரி வாகடம் எழுதி நிறைந்தது. முத்தும்.

சற்குருபாதந் துணை."

என்றுளது. இதற்குச் சமமான நாள் 15—11—1800 ஆகும்.

இதனெதிர் சுவடி எண். 42- 'போகநாயனுர் அருளிய கற்பவிதி 300'ன் முடிவில், அடியிற்கண்டவாறு எழுதப்பட்டுளது.

"சகாப்தம் 1723-ஸு துன்மதி-ஸு சித்திரை-மீ 8வ சுக்கில பட்சமும் பஞ்சமி திதியும், சனி வாரமும், திருவாதிரை நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராஜமானிய ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்த பிரகாரம் கலாசிக்கணக்கு வேங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் போகநாயனுரருளிச்செய்த யோகமார்க்க முந்நூறு எழுதி முடிந்தது முற்றும்.

குருவே துணை."

என்றுளது. இதன் நாள் 18—4—1801 ஆகும்.

இதற்கடுத்த சுவடி எண். 43- 'வைத்தியத்திரட்டி'ன் இறுதியில் பின்கண்டவாறு பொறிக்கப்பட்டுளது.

"தாருண-ஸு தை-மீ 30வ வேலாயுத வாத்தியார் எழுதினது. செகநாத வைத்தியர் குமாரன் அப்பாச்சாமி மேல்பாடம் குணவாகடம். குருநாடி, திருமூலர், அகத்தியராயிரத்தைந்நூறு, வால்மீகர் நாடி, இதிலுள்ள செற்பமுதல் நாடிகளும், வாதபித்த சிலேட்டும வியாதி நிதானங்களையும் கலம்பகமாக்கி யிரண்டு கைகளையு முன்னே போட்டுக் கொண்டெழுதப்பட்டது. துகை கவி 1251. தாழிதளம் 303"

என்றுளது. இதற்குச் சரிநாள் 9—2—1825 ஆகும். இதில் இரண்டு கைகளையும் முன்னே போட்டுக்கொண்டு எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவடி எண். 51- 'சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சை' என்னும் நூலின் முடிவில், அடியில் கண்டவாறு காணப்படுகின்றது.

"சர்வஜித்து-ஸு மார்கழி-மீ 14வ வெள்ளேடு புத்தகம் 1-க்கு ஏடு 330, ஷை தேதியில் சிவக்கொழுந்து பண்டாரம் வசம் ஏடு 100 நீக்கி ஏடு 230"

என்றுளது. இதற்குச் சரிநாள் 27—12—1827.

அடுத்து, சுவடி எண். 84-'வைத்திய அட்டவணை'யின் நிறைவில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டுளது.

"சாலிவாகன சகாப்தம் 1746- தாரண-ஸு கார்த்திகை-மீ 23வ சோமவாரம் காலமே நாழிகை 10-க்கு மகாராசஸ்ரீ மகாராசா சத்திரபதி சாயபு அவர்களுடைய சரணாரவிந்தத்துக்கு, வைத்தியம் கோபால பிள்ளை குமாரன் கொட்டியம் மத்தியஸ்தம் அய்யாக் கண்ணுப்பிள்ளை என்னும் அடியவன், பிதாவாகிய கோபாலப்பிள்ளை அவர்களுடைய சுதசத்தாரினாலே எழுதிவைத்த, அவாளுடைய அனுபோக முறையாகிய கைவளைச்சுவடியை இந்த மூலபாடத்தைப் பார்த்து, இந்தப்பிரதி எழுதி நிறைவேறி "உயிர் நிவேதனம் பண்ணிச் சாஷ்டாங்க விண்ணப்பம். இந்தப்படிக்கு, இந்தச்சுவடி எழுதின சுதசத்தார் நிமித்த காரணம் மகாராசஸ்ரீ உசிர சரணாரவிந்ததாசன் கொட்டிய மத்தித்தம் அய்யாக் கண்ணு பிள்ளை கையெழுத்து. வேணும் அனந்தங்கோடி சாஷ்டாங்கம்"

இவ்வாறான செய்திக்கு நாள் 6—12—1824 ஆகும். இது கல்வெட்டுப் பாணியில் அமைந்துளது. இவ்வாறு மற்றும் பல சுவடிகளில், சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றால், மன்னர் சரபோஜிமீது, இந்த வைத்தியர்கள் எத்துணை அன்பும் பாசமும் வைத்திருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது.

சரபேந்திர வைத்திய முறைகள்—சன்னிரோக சிகிச்சையினை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகராவார். அந்நூலில் வரும் ஒரு பாட்டு:

" பின்னமிலா துறுசரள தேவதா ரங்களிவை பேசி ரண்டா
யுன்னுருகா செடையிடித்தே யிரண்டுபடி தண்ணீர்விட் டுழக்காய்க் காய்ச்சி
முன்னருந்தக் கொடுத்திட்டாற் சித்தவிப் பிரமசன்னி முற்றுந் தீரும்
இன்னமுறை தஞ்சைவளர் சரபோஜி மன்னர்மகிழந் திசைத்த தாமே!"

என்பதாம். இவ்வாறு மன்னர் சரபோஜியினைப் பாட்டுடைத் தலைவன் போலக்கொண்டு எழுந்த நூல்கள் "சரபேந்திர வைத்திய முறைகள்" என்று பெயர் பெறும்.

அவைகளின் உட்பிரிவுகள்: 1. கரப்பான்ரோக சிகிச்சை 2. குன்ம ரோக சிகிச்சை 3. சன்னிரோக சிகிச்சை 4. நீரிழிவு சிகிச்சை 5. சுரரோக சிகிச்சை 6. வாதரோக சிகிச்சை 7. விஷரோக சிகிச்சை 8. சிரோரோக சிகிச்சை 9. காசரோக சிகிச்சை 10. விரணரோக சிகிச்சை 11. பாண்டு காமாலை சிகிச்சை 12. க்ஷயம் உளமாந்தை சிகிச்சை 13. விரேசன முறையும் அதிசார சிகிச்சையும் 14. கர்ப்பிணி பாலரோக சிகிச்சை 15. நயன ரோக சிகிச்சை முதலியன. மற்றும் பல. இவைகள் எமது மகாலிலேயே அச்சாகி விற்பனைக்குள்ளன.

இவற்றுள், 'நயனரோக சிகிச்சைத் தமிழ்ச் செய்யுட்கள்', மராத்தி எழுத்துக்களால் எழுதப்பட்டு "பாவப்பிரகாசிகா" என்ற பெயருடன் எமது மகாலில் உள்ளன. அக் காகிதச் சுவடியில் தேவநாகரி எழுத்துக்கள் காட்சி தரும். அதனைப் படிக்கும்போது தமிழ்ச் செய்யுட்கள், ஒலியுடன் பெறப்படும்.

விஷவைத்தியம் சிறந்த நூலாம். அதுவேயன்றி, எம்மிடம் சர்ப்ப சாத்திரம், சர்ப்பாரூடம், சித்தராரூடம் முதலான நூல்கள் உள்ளன. இவற்றில் பாம்புகளின் ஆதியுற்பத்தி, அவற்றின் பெரும்பிரிவு, ஒவ்வொன்றின் உட்பிரிவு, 72 பாம்புகளின் பெயர், நிறம், உணவு, மணம், உறைவிடம், படமெடுத்தாடும் தோற்றம், படத்திற்காணும் குறிகள், விடப்பற்களின் பெயர்கள், கடிவாயின் வடிவம்கொண்டு இன்ன பாம்பு கடித்ததென உணர்தல், கடிவாயிற் பொசியும் நீரின் வண்ணம், வயது, கடித்தால் விடம் மீளும் நாட்கள், மீளாத நாட்கள், விடத்திற்கு மந்திரங்கள் முதலானவைகள் உரைநடையில் உள்ளன.

பாம்புகளின் சாதிகள்: அனந்தனும் குளிகனும்—பிராமணன். வாசுகியும் சங்கபாலனும்—அரசன். தக்கனும், மகாபற்பனும்—வைசியன். கார்கோடகனும், பற்பனும்—வேளாளன் என்றுளது. இதனால் பாம்புகளின் பெயர்களும் பெறப்படுகின்றன. மேலும் நாகம், சாரை, மூக்கை, வழலை, அரா, ஓலைப்பாம்பு முதலான பெயர்கள் எழுபத்திரண்டாம். காளி, காளாத்திரி, இமயன், இமயதூதி இவைகள் பல்லின் பெயர்கள். இப்படி அநேக செய்திகள் பேசப்படுகின்றன.

பிற எல்லா வைத்திய நூல்களும் நன்மை செய்வதில் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு முந்துகின்றன. சரீர வைத்தியம், காயகற்பம், இரசவாதம், சித்தயோக சாத்திரங்கள், மந்திர யந்திர ஜாலங்கள் முதலியன தமிழ் வைத்தியப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. மனிதர்கட்கேயன்றி, மாடுகள், குதிரைகள், யானைகள், பறவைகள் முதலானவற்றிற்கும் எம்மிடம் வைத்திய நூல்கள் (விற்பனைக்கும்) உள்ளன.

முன்பு, கண்வைத்தியத் தமிழ்ச் செய்யுட்களைத் தேவநாகர எழுத்தில் எழுதிக் காட்டியிருப்பதுபோல் பல சுவடிகள் எமது மகாலில் உண்டு. தெலுங்கு தோத்திரங்கள் தமிழ் எழுத்துக்களில் காணலாம். விஷ்ணு தோத்திரம் அடியிற்கண்டவாறு காட்சிதருகின்றது.

மறுகுலுண்டாமம்மு நேனு மச்சாவத்தாரா
குறுத்துகா குறுப்பச் சூடு கூர்மாவத்தாரா
வருகுண்ட வவுக்கா வய்யா வராக அவத்தாரா
செருலுக்கு நிஞ்சு நரசிம்மாவத்தாரா
வட்சமு—கிருலுகருகு வாமன அவத்தாரா
பட்சிவாகனுண்டா பலபத்திர அவத்தாரா

என்று இவ்வாறு தொடங்கும் சுவடியும், வைத்தியச்சுவடிகளுடன் சேர்ந்துளது. (சுவடி எண். 18b-ன் இறுதி) ஒரு ஏட்டில் மழை பெய்விக்கவும், அதில் நனையாதிருக்கவும் மந்திரம் எழுதப்பட்டுளது. ஆனால், இவ்வேடு சிதைந்துளது.

மேற்கூறிய வைத்திய நூல்கள் யாவும் நோய்கள் வந்தபிறகு காத்துக் கொள்வதற்குதவும். ஆனால், நோய்கள் வருமுன் காத்தலே சிறந்தவழி. அதற்குத்தான், நம்முன்னோர், நமக்கு நல்வழி நீதிநூல்களை ஏராளமாகத் தந்துபோந்தனர். அவைகள், வாழ்க்கைக்கு நல்வழிகாட்டுவனவாகப் பெரும் பான்மை அமைந்துள்ளன. நோய்வராமல் காப்பதற்கென்றே எழுந்த நூல்கள் பல உள.

வருமுன் காப்பான் உத்தமன். வந்தபின் காக்கின்றவன் மத்திமன். வந்தும் காவாதான் அதமன் என்பர் ஆன்றோர்.

உத்தமனாக விளங்க வேண்டுமானால் வருமுன் காக்கவேண்டும். நோய் வருமுன் காத்தலாவது, நோய் வராமல் காத்துக்கொள்ளுதலாம். அதற்குச் சில விதிமுறைகள் உண்டு. அவையாவன:

தேரையர் கூறிய வைத்திய முறைப்படி நடக்கவேண்டும். சிறுவயதில் அல்லது காலை வேளையில் உணவு கொள்ளவேண்டும். செவ்வையாக அரைக்கப் பட்ட சந்தணத்தினையும், அகில் மணத்தினையும் கைக்கொண்டால் நரையோடு கூடிய மூப்படைந்திருந்தாலும் அவர்கள் சாகமாட்டார்கள்.

அன்றுடம் தோய்த்த உடைகளை உடுக்கவேண்டும். அதாவது கந்தை யானாலும் கசக்கிக் கட்டவேண்டும். கூழானாலும் குளித்துக் குடிக்கவேண்டும். பசுவின்பால் அருந்த வேண்டும். காற்றோட்டமுள்ள திண்ணையில் உறங்க வேண்டும். உரையாடுதற்கு, நல்ல கல்வி கேள்விகளிற் சிறந்த ஒரு நண்பரைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இளநீர் உண்ணவேண்டும். நன்கு தோய்ந்த தயிரை உணவில் சேர்த்து உண்ணவேண்டும். தீமை பயக்கும் விளையாட்டினை விளையாடக்கூடாது. தீய வர்களின் நட்பு கூடாது. செண்பகப் பூமாலையை அணிந்துகொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்கள் எண்பது வயதினை எட்டிப்பிடித்தாலும் அவர்கள் இனிதாக வாழ்வார்கள்.

மலசலம் வரும்போது அடக்கக் கூடாது. அப்போதைக்கப்போதே கழித்தல் வேண்டும். பெண்ணுறைசை மிகுதியாகக் கொள்ளக்கூடாது. உருக்கிய (பசு) நெய்யையே உணவோடு கலந்து உண்ணவேண்டும். சாப்பிடும்போது தண்ணீரைக் குறைத்துக் குடித்து, சாப்பிட்ட பிறகு நிறையக் குடித்தும், அதிகத் தண்ணீர் கலந்த மோரினைச் சேர்த்தும் உண்ணவேண்டும். பூமி அதிர நடக்கலாகாது. அளவறிந்து உண்ணவேண்டும். வெந்நீரில் நீராடல் வேண்டும். பகலில் உறங்கலாகாது. (இருவேளை) காலை, மாலை மலங்கழிக்கும்போது தாராளமாகக் கழிபடல் வேண்டும். சிறிது நேரமே பெண்ணைப் புணர வேண்டும்.

இரவில் படுத்துறங்கும்போது இடதுகைப்புறம் கீழும், வலதுகைப்புறம் மேலுமாகப் படுத்துறங்க வேண்டும். பசும்பாலை உணவாகக் கொள்ளவேண் டும். எண்ணெய் முழுக்கினை வெந்நீரில் செய்யவேண்டும். பகலில் பால் உண் ணல், உறங்கல், பெண்போகம், இளம் வெய்யில் இவைகள் கூடாது. இரவில் தயிர் உண்ணலாகாது. தேவாமிர்தமாயினும் முதல்நாள் சமைத்த பழைய கறிகாய்கள் உணவினை உண்ணக்கூடாது. அதாவது ஊசிப்போன பண்டங் களைப் புசிக்கலாகாது.

பசித்தாலன்றி புசிக்கக்கூடாது. இவைபோன்ற இன்னும் அநேக விதி முறைகளைக் கொள்ளல் வேண்டும். அப்படி நடந்தால் யமன் நம்மைக்கண்டு அஞ்சுவான். அவனைக்கண்டு நாம் பயப்படத்தேவையில்லை. மேற்கூறிய விதி முறைகளையேயன்றி மேலும் பல விதிமுறைகளைப் பின்வரும் செய்யுட்கள் கூறுகின்றன.

இந்நூலகத் தமிழ் வைத்தியப் பகுதியில் "அறுசுவை ரசவர்க்கம்" எனும் "பலவகைச் சிந்தாமணி" என்கின்ற நூல் ஒன்று இருக்கிறது. அதனுள்

நோய் வருமுன் காத்தல் முறை கூறப்படுகிறது. மிகவும் செல்லரித்து இருப்பினும் கூடிய மட்டில் செய்யுட்கள் சரி செய்யப்பட்டு, இதனடியில் தரப்பட்டுள்ளன. அவையாவன :

வியாதி வராமல் நடந்துகொள்ளுகிறது.

வெண்பா

1 தேரன் கவியும் சிறுகாலை உண்டியும்
வார முடைய மனையாளும்—நேரே
அரைத்திருந்த சாந்தும் அகில்மணமுங் கொண்டால்
நரைத்திருந்தும் சாகார் நவின்று.

2 அன்று கழுவிய ஆடையும் ஆவின்பால்
தென்ற லுலாவிய திண்ணையும்—நன்றே
உரைத்திருக்க வல்லா ரொருவரையும் பெற்றால்
நரைத்திருந்தும் சாகார் நவின்று.

3 இளைய விளநீரும் மூரற் றயிரும்
துலைய விளையாடா நட்பும்—தலைவனையச்
செண்பக மாலையும் செஞ்சாந்தும் பெற்றக்கால்
யெண்பதுக்கு மேலு மினிது.

கலித்துறை

4 முக்கால் மலமு மதுபோல வாழ்வு(டன்) மூன்றுதும்மல்
சிக்காம லாருஞ் சலதாரை விட்டு (ஸ்)திரிகங்கைசற்றே
மைக்காடு கொண்ட விழியாய் மனிதருக் காகுமென
எக்காலும் நோய்பிணி வாராது காயம் இரும்பொக்குமே!

வெண்பா

5 திண்ண மிரண்டு மடக்காமல் சிக்காமல்
பெண்ணின்மே லாசை பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தன்
பேருரைக்கப் போமே பிணி.

6 குன்றைக் காடை குருவை யரிசிகொள்
இன்றிக்கா லன்னம் பேடிலம்—நாடோறும்

நண்ட(ல) போத்தியி நத்தையி னுட்சதை
யுண்டக்கால் வெகுவூழி யிருப்பாரே[1].

விருத்தம்

7 நடக்கில் மெத்தென நடப்போம் நாளு மளவு மறிந்துண்போம்
முடக்கூவெந் நீர்குளித் துண்போம் உறங்கில் மீறியும் பகலுறங்கோம்
சடக்கென மலமிரண் டையுங்கழிப்போம் தையலா ரையும்புணர்ச்
சியிற்சற்றே
இடக்கைக் கீழ்ப்படப் படுக்கிலும்படுப்போம் எமனூர் நமக்கிடர்
செய்யாரே!

8 பாலுண்போம் எண்ணெயேரில் வெந்நீருங் குளிப்போம்
பகல்புணர்ச்சி நித்திரையும் பயோதரமும் விரும்போம்
ஏலஞ்சேர் குழலியையும் இளவெயிலும் வேண்டோம்
இரண்டடக்கோம் ஏரண்ட(நுக)ரோம் இராத்தயிரும் வேண்
மூலஞ்சேர் கறிநுகரோம் மூத்ததயி ருகப்போம் [டோம்
மூதநாளில் வெந்தகறி அமுதெனினும் வேண்டோம்
ஞாலமெலாந் திரிந்திடினும் நாம்பசியா துண்ணோம்
நமனூர்க்கிங் கிடமேது நாமிருப்போம் சுகமே!

9 காலமே மலங்கழிவோம் தயிரு முண்போம்
கருதியே யமுதுண்போம் கறியு முண்போம்
பாலுண்போம் இரவி லிடக்கை கீழ்க்கொள்வோம்
பசித்துண்போம் பையவே நடப்போ மென்றும்
சேலின்கண் மடவார்பால் நடுவே நிற்போஞ்
சீதநீ ரொடுகுடியோம் குளியோம் பின்னும்
மாலுண்டோன் -னம்நீரே-யும்பா லெம்பால்
வருதூதற் கென்கெடுவீர் மதிகெட் டீரே!

வெண்பா

10 ஏறுமல மூன்று மிரண்டசனம் மூன்றுதும்மல்
ஆருஞ் சலமாற்கும் ஐங்கரத்துங்—கூறுங்கால்
ஆயிழையீர் கேளீர் அனுபோக மொன்றும்
வாழு முயிர்க்கு மருந்து.

---

1 இச்செய்யுள் சரியில்லை.

11 மூன்றில் தலைமுழுகி மூவஞ்சில் பல்விளக்கி
காண்ட மலமஞ்சில் கழிப்பித்து—ஈண்டமுது
நெய்பாலோ டுண்பீராய் நீண்ட பெருங்காயம்
கைகாலும் வச்சிர காயம்,

விருத்தம்

12 மாத மொருக்கால் பேதியுடன் வாந்தி புரிவார் தினமொருக்கால்
காதலுடன் வெந்நீர் குளிப்பார் கால மறிந்து படுத்துண்பார்
நாத[1] மொழியார் தம்மையெட்டு நாளைக் கொருக்கால்
கலந்தணைவார்
வாத முதலாய் நோயுழைத்தும் மாயா ருடலந் தேயாரே!

13 மாத மாதம் விரேசனம் வாந்தியும்
மாதர் தங்களை மேவலு மப்படி
போது மூன்றும் வுருநடைக் கொள்வதும்
பூர ணப்படப் பாலைப் பருகுவர்
வேதன் முன்சொன்ன வெந்நீர் குடிப்பதும்
மீனுண் ணுமை விருப்பது மவ்விடம்
வாத பித்தங்கள் தன்னில் வணங்கிடும்
மானி டர்க்கு மறலியு மில்லையே!

14 திண்ணர் பண்ணர் சிருக்கீரை திருயை மறவார் சீர்கேடர்
பொன்னுங் காணிக் கறிகூட்டார் பூசார் பாதம் நெய்கொண்டு
பண்ணர் மதியந் தனைப்பாரார் பால்வாத் துண்ணர் பல்தேயார்
கண்ணே குருட ராவார்மற் றிவரே குருட ராவாரே!

உத்தம குணங்களறிந்து நடக்க

15 மங்கையோ டிணங்கி யொழிந்தபின் யாதொரு
வஸ்துவை யுண்கிலார் தமக்கும்
வலிநரம் பதனை யளித்திலார் தமக்கும்
வாரியுட் கொண்டவர் தமக்கும்
சங்கையி லீர முலருமுன் சிறுநீர்
தரித்ததை யிறக்கிலார் தமக்கும்
தயவுடன் யாதொரு கனியருந் தியபின்
சலமுள்ளே கொண்டவர் தமக்கும்

1 மொளியார் என்றுளது.

கொங்கைமெய்ப் பொருது மங்கையோ டிணங்கி
யமிதம் குதித்தபின் நீங்கிலார்
தமக்கும் குரிகையால் வருந்தினோர் தமக்கும்
குவிதனில் சேர்க்கைசெய் தவர்க்கும்
பொங்கிய புனலினில் சிறுநீர்க்கிருந்தவர் தமக்கும்
பொலியஞ்சித் துண்டவர் தமக்கும்
போகமே குறைந்து ஆகமே மெலிந்து
போமென வுரைத்தனர் பெரியோர்

திருப்புகழ் சந்தம்

16 காலை மாலைக் கருதிஞ்சி யுங்கடு
மேலு மத்தில் விளங்கு முட்டிணஞ்
சீல மாகச் சிறந்திடும் போதினில்—சிறப்பாகும்.
மூல மானதை மூன்று விசைகழி
யேல மானதை இறுக்கி டாததால்
சால போகஞ் சமத்துட னேகொள்ளில்—சதிராகும்
பாலை மாலை படுக்கையி லேகொளும்
மூல மானதை முன்பி னருந்திடா
கோல மாக வருதிர மேசலம்—குறையாமல்
ஓல மாக உதையத்தி லேயெழுந்
தோல சுத்திய துள்ளது மாத்தியே
ஞால மோது நடத்திடுங் காலையில்—நலமாகும்
வேலு சொல்லின் விதியை மனதினில்
சீல மோதுஞ் சிறந்த அறிவுடன்
தூல மாகிய தொல்லை யகற்றிடில்—சுகமாகும்
மேலில் ரோகம் விளைந்திடா தேவடி
வாலை சூரிய வர்ணம தாக்கிடும்
போலு மன்மத னேவலும் புக்கியே—யொளிவாமே!

பெண்களைச் சேராத நாள்

17 திங்களில் திங்கள் முன்னுள் சென்மநாள் பகைநாள் மற்றும்
மங்கையர் மூன்று நாளும் வளர்பிறை மறைத்த நாளும்
துங்கமாம் பவற ணையில் தோகையைப் புணர்வி ராகில்
அங்கமும் பிணியால் நொந்து ஆயுளுங் குன்றுந் தானே!

18 துஞ்சுதல் பாக்குத் தின்னல் துயில்தண லொழிதல் நீரை
மிஞ்சவே குடித்த லெண்ணெ மெய்தனி லிடுதல் செய்தல்

கொஞ்சிய [1]குழலி னுளைக் கூடுதல் மயிர்மு டித்தல்
தஞ்சமாஞ் சோம வாரந் தவிர்வது தருமந் தானே!

இவ்வாறு (நோய் வருமுன்) நடந்துகொண்டால் நோய்க்கு வேலையில்லை. உடல், நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருக்கும். நீண்ட ஆயுள் உண்டு. இலக்குமி வாசம் செய்வாள். நலம்பல விளையும். இவ்வாறு நடந்து கொள்ளாவிடில் இலக்குமி நீங்குவாள். மூதேவி குடிபுகுவாள். அவ்வாறு மூதேவியிருப்பிடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மூதேவியிருப்பிடம்

மாலை யுறங்கல் மயிர்முடித் (தாதல்) மா தருடல்
கோல மளிந்ததன்பின் கூடுதலுஞ்—சாலவே
கொட்டாவி நெட்டி குறுகுறுப்புக் கண்கிடத்தல்
நட்டு விழுதல் நவில்.

அன்னமிக வுண்பானும் ஆடையழுக் காவானும்
இன்னமுமே யீறு விளக்கானும்—முன்னமாங்
காலை துயில்வானுங் கல்விநல மில்லானும்
ஆலயமாம் மூதேவிக் கங்கு

விருத்தம்

காலை மாலை உறக்கமும் மாதர்தன்
கோல மேனி அழிந்துபின் கூடலும்
சால வுண்டிக்கு இராத்தயிர் சாதமு
மாலோ டாகிலும் மாதுவிட் டேகுமே.

இஞ்சித் தேன்தயிர் எண்ணெய் இலைக்கறி
கஞ்சி கயப்பொடு கங்குலி லுண்பிரேல்
செஞ்சொல் மாமகள் பூமகள் சேய்மகள்
அஞ்சி அஞ்சி அருகில்விட் டோடுமே.

இலக்குமி வரும்; மூதேவி வாராதிருக்கும் வழிதனைக்கூறும் நூல்களையும் நோய்வருமுன் காக்கத்தகுந்த நூல்களையும் சேகரித்து எமது சரசுவதி மகாலில் வைத்துள்ளனர்.

சுவடி எண் 109-ன் c-பிரிவில் "நடக்கைவிதி" என்ற நூல் காணப்படுகின்றது. அதில் நோய் அணுகாதிருக்கவேண்டின் இவ்வாறு நடக்கவேண்டும் என்று விதித்துளது. அதுவருமாறு :-

1. குழலினுளே என்றுளது

நடக்கை விதி

1 கையில் ஏழும் ஒளியின்க ணஞ்சு
நாசியில் மூன்றும் நாவில் ரெண்டும்
தேசியும் தேசனும் கூடப் பிரித்தல்
உச்சியி லுயிர்ப்பில் லாத தொன்றும்
உழைவ ளிவனங் காதி லிரண்டும்
அச்செவி யடைத்தல் மூன்றும் அரிய
நாசி யடைத்தால் நாறும்
வைத்தனன் கடைக்கண் நாலும் (என்றே!)

2 தன்தலை (பு)ன்மைக ளாலும் தகுமுடல் கடுப்பி னாலும்
மென்பனி நனைய லாலும் மீனின்முள் ளருந்த லாலும்
வன்புவா கனத்தி லேறி வருந்துட நடவி னாலும்
முன்பயில் எண்ணெய் நெய்யால் முழுகிலை விடுத லாலும்

3 விடுமயில் நெல்லின் வாயில் விழுங்குகை யாலு மன்ன
மிடுகவை யருந்திப் பின்னை மூச்சறச் செறியா தாலும்
கடுகவுண் டோட லாலும் க(ன)ன்றடி சுடுத லாலும்
வடிவுறு தண்ணீர் தன்னை மலிவுறக் குடிக்கை யாலும்

4 உற்றதோ ருடலிற் சொன்ன உயர்குண மீனந் தன்னால்
முற்றவே வியாதி யெல்லாம் முதிரவே தோன்றும் போது
சேற்றுமாம் வாதம் பித்தம் சிலேட்டும மதனி லொன்றைப்
பற்றவே தோன்று மென்று பகர்ந்தனர் முனிவர் தாமே!

5 ஈந்தெழு கோபத் தாலும் இளவெயில் காய்வ தாலும்
தாங்கிய சுமையி னாலும் சரு(வா)சை யூர லாலும்
ஓங்கிய பசியி னாலும் உண்டிமேல் உண்டி யாலும்
தேங்கிய மலக்கட் டாலும் தீராநோய் சுமக்குந் தானே!

6 கருவுறு மீனின் முள்ளுங் கலந்திடு நெல்லும் வாலும்
மருவிய கல்லெ லும்புங் கையரல் மருந்தீட் டாலும்
பருக்குகோ றன்ம லாலும் பழமலச் சிக்க லாலும்
சுழலவே முடக்கிக் கொண்டு சுகமறக் கிடக்கை யாலும்
மருளவே மேடு கானல் மனமுற நடக்கை யாலும்
பெருகவுண் டோட லாலும் பெய்திடு நோய்கள் தானே![1]

7 மனமுற வுறங்கை யாலும் மருளாம லுறங்கா (தா)லும்
கனமலஞ் செரித்து நின்று கழற்றுத வீர்மை யாலுஞ்

1. இதில் ஆறு வரிகள் உள்ளன.

தனமிகத் தேட லுற்றுத் தானுறு மோகத் தாலும்
சினமிக உறுக்கை யாலுஞ் சேர்ந்திடு நோய்கள் தானே!

8 இப்படி யுதர நோய்கள் இவையிவை யொருநூற் றெட்டு
மெய்ப்பட யிவைகள் தன்னால் மேவியே தோன்றுமென்க
செப்புவார் இதற்கு மேலுந் திகழுநோய் குணங்கள் தன்னை
ஒப்புடன் முனிவர் தானு முறைமுறை வகுத்துச் சொன்னார்.

9 ஆணவத்தால் வந்தநோய் பத்தாறு அதிகமாய்ப் பயத்தினால் முப்பதென்ன
கனியுடன் காய்கள் தன்னால் கலந்திடும் இருபத் திரண்டு
இவையிவை வகுப்புப் பார்த்து இறைவனார் வகுத்துச் சொன்னார்[1]

10 விடிந்தவுடன் வெய்யில் காய்தல் விரைவுடன் பகற்பால் கூட்டல்
படிந்தெழுந் துற்ற முத்த பைந்தொடி தன்னைச் சேர்தல்
கடந்துறு மிவைகள் வீழ்த்துக் கட்டுண்ட நீர்கு டித்தல்
மடந்தையர் மணமே தோய்தல் வாலிபன் கிழவ னாவன்.

11 மாலையில் வெய்யில் காய்தல் வாலிப மடந்தை யாலும்
பாலை யிரவு கூட்டல் பரிமளம் (மிகவே) தோய்தல்
சீலமா மணந்தார் நூறும் தெளிந்தநீர் குடித்த லாலும்
மூலமாம் வயது நீங்கி முதுமைபோய் இளமை யாமே!

நடக்கை விதி முற்றும்

மேற்கண்ட செய்யுட்கள் பிழைபட்டும், அடிகள் பிறழ்ந்தும் உள்ளதால் சரியாக விளங்கவில்லை. இதன் நல்லதோர் பிரதி கிடைக்குமாயின் பயன் தரும். அதில் கூறியாங்கு நடந்தால் நோய் வருமுன் காக்கலாம். வந்தபின் காப்பதைவிட, நோய் வருமுன் காப்பதே சாலச் சிறந்ததொன்றாகும்.

அவ்வாறான அடிப்படையில் "ஆசாரக்கோவை" என்னும் தலைப்பில் 'பெருவாயின் முள்ளியார்' ஒருநூல் இயற்றியுள்ளார். அதில், நல்லொழுக்கங் கட்குக் காரணம், ஒழுக்கம் பிழையாதவர் அடையும் உறுதி, வைகறையில் செய்யவேண்டியவை, காலை மாலை கடவுள் வணக்கம், நீராடலின் முக்கியம், தவிர்க்க வேண்டுவன, உண்ணும் முறைமை, புகத்தகா இடங்கள் முலான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. அதனில்:

நோய் வேண்டாதார் செய்யலாகாதவை:

பாழ்மனையுந் தேவ குலனுஞ் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த வொற்றை முதுமரனும்
தாமே தமியர் புகாஅர், பகல் வளரார்
நோயின்மை வேண்டு பவர். —(57)

1. இதில் மூன்று வரிகளே உள்ளன.

என்று கூறியுள்ளார். அதாவது, பாழ்வீடு, சுடுகாடு, ஊருக்கு வெளியில் உள்ள தனித்த பாழ்மரம், இவற்றினிடத்துத் தனித்துச் சேரலாகாது. பகலில் தூங்கலாகாது. இவை நோய்வராதிருக்கும் வழிகள் என்கின்றார். ஆசாரக் கோவை முழுதுமே நோய் வராதிருக்கும் வழிதான். நீதிசாரம் முதலிய பிறவு மன்ன.

உலகப் பொது மறையாம் திருக்குறளில் 'மருந்து' என்ற அதிகாரத்தின் மூலம் வள்ளுவர் மனிதன் நல்வாழ்வு வாழ வேண்டுவதன் நுட்பங்களை விளக்கி யுள்ளார்.

நோய் வருவதற்குச் சில காரணங்களைக் கூறுகின்றார். அவற்றுள் பழவினை யான் வரும் நோய்கள், அவற்றின் கழிவின்கணல்லது போகாது. பிறநோய் கள், நமது உணவினாலும், உறக்கத்தினாலும், உணவு செமியாமையாலும், இணைவிழைச்சாலும், பிறவற்றாலும் அவைகள் மிகினும், குறையினும் அதனான் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவைகளால் ஏற்படும். இதனை,

> " மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று"

என்று (941) கூறியுள்ளார். வாத பித்த சிலேத்துமங்கள்பற்றி, இக்கட்டுரை யின் "நடக்கை விதி" 4-ம் செய்யுளில் கூறப்பட்டுள்ளன. உண்ட உணவு செமித்த பிறகுதான் உண்ணல்வேண்டும்.

நம் வீட்டிற்கு வந்த விருந்தினர்க்காக, அடுப்பில் உலையேற்றி, அதில் அரைப்படி அரிசியினையிட்டு, அது பாதி வெந்துகொண்டிருக்கும்போது, மீண் டும் இரண்டு விருந்தாளிகள் வந்தால், அவர்களுக்காக மேலும் ஒரு கால்படி யரிசியினைக்களைந்து அதனுடன் சேர்ப்பதில்லை. முன்பு பாதி வெந்துகொண்டி ருந்த சோற்றினை, அது வெந்ததும், வடித்துவிட்டுத்தான், மறு உலை வைத்துச் சோறாக்கி, விருந்தினர்க்கிட வேண்டும்.

அதுபோலவேதான், நாம், முதலில் சாப்பிட்ட உணவு, பாதிசெமித்துக் கொண்டிருக்கும்போதே, மீண்டும் உணவு உண்டால் வயிறு கெடும் என்பத னையே கருத்தில் கொள்ளவேண்டும். அப்படி இருந்தால் இவ்வுடல் கெடாது. அதனால்தான்

> " மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
> அற்றது போற்றி உணின் " என்றார்—942.

இதனை 'நடக்கை விதி' 5-ம் செய்யுள், 'உண்டிமேல் உண்டியாலும் நோய்வரும்' என்று கூறுகின்றது.

நீண்ட நாள் வாழ வழிவகுக்கும் வள்ளுவர்,

" அற்றால் அளவறிந் துண்க அஃதொருவன்
பெற்றான் நெடிதுய்க்கு மாறு " என்கிறார்—943.

'பழமொழி'யும், மனிதன், நெடிய நாட்கள் வாழவேண்டுமெனில், அவன் உணவு உண்ணும்போது, நன்கு மென்று தின்ன வேண்டும் என்பதனை,

" நொறுங்கத் தின்றவன் நூறாண்டு இருப்பான் "

என்று கூறுகின்றது.

" உழைக்கப்பசி; பசிக்கப்புசி " என்பதும் ஆன்றோர் வாக்கு. அதனைக் கொண்டு, 'பசித்தாலன்றி உண்ணலாகாது' என்ற கொள்கைவேண்டும். முன்னே உண்டது செரித்தாலன்றிப் பசிக்காது. எனவேதான்'

" அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து "

என்பார் வள்ளுவர். இதுபற்றியே "மீதூண் விரும்பேல்" என்று ஆத்தி சூடியும் கூறுகின்றது. " லங்கணம் பரம ஔஷதம் " என்பதும் பழமொழி.

கைப்பு, புளிப்பு, தித்திப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு எனும் அறுவகைச் சுவையாலுண்ணாது, ஒருபடியே உண்ணுபவன் நோய்வாய்ப் படுவன். " உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது " என்பது முதுமொழிக் காஞ்சி.

" பைவாய் மருந்துகொண்டு பண்டிதருண் பற்றலர்க்கென்
செய்வார்தென் கோவைத் தினகரா!

என்று தினகரவெண்பாவும் கூறுகின்றது.

நோய் வராதிருக்கும் வழிகூறிய வள்ளுவர், மருந்தின் இலக்கணமும் கூறுகின்றார். 'நோயுற்றவனும், நோய் தீர்க்குமவனும், மருந்தும், அதற்குத் தக்க மருந்தினைக் காலமறிந்து தப்பாமல் இயற்றுவானும் ஆகிய நால்வகைத் திறந்தது மருந்து' என்பதனை,

" உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பானால் கூற்றே மருந்து " என்று கூறினார்.

நாலடியாரும், " தூயதல்லாமை " என்ற ஒரு அதிகாரம் வகுத்து, நல்வாழ்வுக்கு வழி கூறுகின்றது. இந்த உடம்பிலுள்ள மலங்களினிழிவைக்கூறி பெண்வழிச்சேராது, நல்வழிச்சார்ந்து, துறவினை மேற்கொண்டு ஒழுகும் வழிகளைக் கூறுகின்றது.

" தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமோ?—எக்காலும்
உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல் " என்பது நாலடியார்.

ஏலாதி, திரிகடுகம் போன்ற நூல்களும், கொள்ளுவனகொண்டு தள்ளுவன தள்ளல் வேண்டுமெனப் பகர்கின்றன. இன்னா நாற்பது, இனியவை நாற்பதும் இதன் அடிப்படை கூறும் நூல்களாகும்.

தஞ்சை மாவட்டம், திருமருகல் கிராமத்தில் தங்கசாலை வைத்துத் தங்கக்காசுகள் அடித்து வழங்கி, அரசாட்சி செய்த மன்னர்கள் ஆண்ட தஞ்சை அரண்மனையில் உள்ள சரசுவதி மகாலில், ஏராளமான மருத்துவ நூல்கள், தமிழ், வடமொழி, மராத்தி, தெலுங்கு முதலான மொழிகளில் உள்ளன. சில நூல்களே அச்சாகி வெளிவந்துள்ளன. எமது வெளியீடுகளில் ஒன்றான "சித்த மருத்துவச் சுடர்" என்னும் நூலினைப் பாராட்டித் தமிழக அரசு, பரிசும், பாராட்டிதழும் வழங்கியுள்ளது.

தஞ்சைக்கும், சரசுவதி மகாலுக்கும் தனிச்சிறப்பளிக்கும் எமது சரசுவதி மகால் மருத்துவ நூல்கள், பல்லாயிரக்கணக்கான மக்களின் நோயினால் வரும் இடர்களைந்து, ஆரோக்கிய வாழ்வளித்துள்ளன. இவைகள் குறைந்த விலையில் கிடைக்கும்

வேறெங்கும் கிடைக்கப்பெறாத மருத்துவ நூல்களும் எமது மகாலில் இடம் பெற்றுள்ளன. அவற்றை, விரிப்பிற் பெருகுமென விடுத்தாம். தமிழ் மருத்துவச் சுவடிகளுள் ஒன்றில், ஒரு ஏட்டில் (109—ஐ) 'காதல்' என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது:-

காதல்

" காக்கை பல்லி சிறுதும்மல் கருமங் கருதி யிருந்திடத்தே
ஏற்க வந்து இடஞ்சொன்னால் எல்லாக் கரும நன்றாகும்
ஆக்கம் பேசி யிருந்திடத்தே அவரில் ஒன்று வலஞ்சொன்னால்
நோக்க வேண்டாம் அறக்கருமம் நோய்கள் காட்டுங் கண்டீரே!"

மேலும் வட்டச்சக்கரபந்தமாக ஒரு சித்திரகவி இதில் இடம்பெற்றுளது. அது

" நீய னுமலை வேதநீ
நீத வேடனு மாயநீ
நீய மாகரி காலநீ
நீல காளிக னையநீ " என்பதாம்.

இம்மட்டே உளது. இது காக்கை, பல்லி, தும்மல் இவற்றின் பலாபலனைக் கூறுகின்றது. இது சோதிடம் பார்த்துக் கருமம் செய்வார்க்குதவுவது. அடுத்துள்ள சித்திரகவி சிறப்பாக அமைந்துள்ளது.

பல சுவடிகளில் மணிப்பிரவாள நடை காணப்படுவதோடு, பேச்சு வழக்குத் தமிழும் இடம் பெற்றுள்ளது. வைத்திய அட்டவணை என்ற பெயரால் பல நூல்கள் உள்ளன. தனியார், தனது சொந்த உபயோகத்தின் பொருட்டுப் பல நோய்களுக்கு மருந்துகள் எழுதிவைத்த சுவடிகளாகுமிவை. ஆயிரக்கணக்கான பரம்பரை வைத்தியர்கள், தமது வீட்டில் பழங்காலத் தமிழ் சித்த வைத்திய முறைகள் அடங்கிய நூல்கள் பலவற்றைக் காப்பாற்றி வந்தனர் அவற்றைக் கையாண்டு, பேரும் புகழும் பெற்று வந்தனர். முதலில் கூறியவர்கள், அரண்மனை வைத்தியர் என்ற பெரும் புகழையும் எய்தி வாழ்ந்தனர். இவ்வாறானவர்களுடைய சிறந்த மருத்துவ நூல்கள், எமது சரசுவதி மகாலுக்குக் கிடைத்தனபோக எஞ்சியன அழிந்துபட்டன.

பலநூல்கள், சிறந்த மருத்துவங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தும், அவைகள் பரிபாடை(குழூஉக்குறி)ச் சொற்களால் ஆக்கப்பட்டிருத்தலின் அவைகள் அறிவாறின்றிப் பயனற்றுப் போயின.

சித்தர் நூல்கள், தமிழ் நாட்டில் மிகவும் புகழ் வாய்ந்தவை. சித்தர்கள் பலராயினும், அவர்களுள் பதினெண்மர் எல்லாராலும் அறியப்பெற்றவர்கள். அகத்தியர் (கும்பமுனி), கோரக்கர், தன்வந்திரி, திருமூலர், தேரையர், பிரமமுனி, யூகிமுனி, கொங்கணர், சட்டைமுனி, போகர், சுத்தானந்தர், மச்சமுனி, இராமதேவர், புலிப்பாணி, கருவூரார், உரோமரிஷி, நந்திதேவர், தட்சிணா மூர்த்தி, வசிட்டர், வாசமுனி, தில்லைமுனி, காலாங்கி, கம்பளிச்சட்டை கைலாசநாதர், வால்மீகி, அழுகண்ணிச்சித்தர், கவுபாலர், புண்ணாக்குச் சித்தர் முதலானவர்களுடைய பெயரால் மருத்துவம் எழுதப்பெற்ற சுவடிகள் இங்கு இடம் பெற்றுள்ளன.

நோய்களின் பெயரால் விளங்கும் சுவடிகள் பல. வாதநூல், குன்மரோக சிகிச்சை, பாண்டுகாமாலை சிகிச்சை, சன்னிரோகம், சுரங்களுக்கு மருந்து முதலியன அவைகள். மருந்துகளின் பெயரால் இடம்பெற்ற நூல்கள் காயகற்பம், செந்தூர அட்டவணை, மாத்திரைவர்க்கம், பற்பமுறைகள் முதலியன. நாடி நிதானம், நாடிவிதி முதலான நூல்களும், வாகடம், இரசவாதம், இரசவர்க்கம், முப்புநிகண்டு (வைத்தியம்) முதலான நூல்களும் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பலவகையான வைத்தியச்சுவடிகள் எமது மகாலில் இடம் பெற்றுள்ளன. 'போஷஜ கல்பம்' என்ற ஆயுர் வேத வைத்தியநூல் மணிப்பிரவாள நடையில் உள்ளது. தமிழில் எழுதப்பட்ட பகுதிகளும் உள்ளன. மற்றும் பல.

இவ்வாறான, மக்களுக்குப் புதுவாழ்வளிக்கும் மருத்துவ நூல்களை, இயற்றச்செய்தும், வாங்கியும், சேகரித்துவைத்த மாமன்னர் சரபோஜியினை ஒரு சித்தர் என்றே கூறலாம். இதற்கு ஆதாரமாக ஒன்று கூறலாம். இவரது தன்வந்திரி மகாலில், இவரது காலத்தில் செய்யப்பட்ட சொர்ணபூபதி,

த்ரைலோக்கிய சிந்தாமணி, ரசபூபதி, பஞ்சாமிர்தபற்படி ஆகிய நான்கு "கட்டு மாத்திரைகள்" எமது சரசுவதி மகால் காட்சிப் பேழையில் இடம் பெற்றுள் ளன. இவைகள், எத்துணை காலமானாலும், தங்கள் வீரியத்தினை இழக்காதவை கள். அவைகளின் ஒருபுறம் மாத்திரையின் பெயரும், மறுபுறம் குளிகைசெய்த தேதியும் குறிக்கப்பெற்றுள்ளன. பலவகையான நோய்களையும் போக்க வல்லது. இவ்வாறான குளிகைகள் முதலானவைகளைக்கொண்டு நோயாளி களைக் குணப்படுத்திய மன்னர், அவர்கள் நோய் நீங்கிச் செல்லுங்கால் (அக் காலத்தில்) இரண்டு ரூபாய் இனாம் கொடுத்து அனுப்பியதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதனால், சரபோஜி மன்னரின் பரந்த மனப்பான்மையையும், இரக்க குணமும் எண்ணி எண்ணி இறும்பூது எய்துதற்குரியன.

தன்வந்திரி வாகடத்தில் காணப்படும் பாடல்களில் 2

பொற்றலை பொடுதலை பொருந்து காக்கணான்
வற்றிய நீலிவல் லாரை முப்பழம்
சிற்றிடை மடநல்லாய் தேனிற் கொண்டிடில்

பற்றிய நரைதிரை பறந்து போகுமே. 208
வில்வவேர் சித்தமுட்டி வீறுபா சிப்பயறு
நல்சுக்கு கொத்தமல்லி நற்பொறியும்—சொல்லரத்தை
யித்தனையுங் கூட்டி யிடித்ததனைக் காய்ச்சியுண்ணச்
சத்திவிக்கல் போமே தவழ்ந்து. 1100

வைத்திய அட்டவணையில்: நேத்திர ரோகத்திற்கு மாத்திரை

எள்ளுப்பூ 80, திப்பிலி 60, சாதிப்பூ மொட்டு 50, மிளகு 16 இவை தண்ணீர் விட்டரைத்து, மாத்திரை செய்துலர்த்தித் தண்ணீரிலே உரைத்துப் போட்டால் நேத்திர ரோகங்கள் தீரும்.

வாழ்க சரபோஜி மன்னர்! வளர்க சரசுவதி மகால்!!

" சொல்லா லளப்பரிய சோதிவரை மீது
தூயதுரி யப்பதியில் நேயமறை யோது
எல்லாஞ்செய் வல்லசித்தர் தம்மையுறும் போது
இறந்தா ரெழுவாரென்று புறந்தாரை யூது."

—இராமலிங்க வள்ளலார்

முற்றும்

விபூதி தோத்திரம்.

புலவர். **ச. திலகம்,**
தமிழ்த்துறை, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

"மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்—திருநீறே."
(திருஞானசம்பந்தர்)

உலகத்தில் உண்டான சமயங்களிலே மிகவுந் தொன்மையானது இந்து சமயம். இந்து சமயம் ஆறுவிதமான தெய்வ வழிபாடுகளை உடையது. இதில் சைவமதத்தைச் சார்ந்தவர்கள் விபூதியாகிற திருநீறும், கண்மணியாகிற உருத்திராக்கமும், மந்திரமாகிற ஐந்தெழுத்தையுமே சாதனங்களாக உடையவர்கள். இவற்றுள் மிக இன்றியமையாச் சாதனமாய் முதற்கண் நிற்பது திருநீறே. உருத்திராக்கம் அணியாமலும், திருவைந்தெழுத்தை ஓதாமலும் திருநீற்றை மட்டும் அணிபவர்கள்கூட ஓரளவில் சைவர் என்றே மதிக்கப் பெறுதல் கண்கூடு. ஆனால் திருநீற்றை அணியாமல் ஏனைய சாதனங்களைக் கொள்ளும் சைவர் ஒருவரும் இலர். இம்மரபு ஒன்றே திருநீற்றின் பெருமையை விளக்கப் போதிய சான்றாகும்.

திருநீறு ஆன்மாக்கள் செய்யும் பாவங்களை நீக்கி விடுதலால் நீறு எனவும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய முத்திச் செல்வத்தைத் தருதலினால் விபூதி எனவும் பெயர் பெற்றது. பூதி என்பது செல்வத்தின் பெயர். திருநீறு செல்வத்தைத் தருவதாலும், செல்வமாகவே விளங்குவதாலும் பூதி எனப் பெயர் பெற்றது. மேலும் அதன் சிறப்பு நோக்கி விசேடமான செல்வம் செல்வத்துட் செல்வம் என்ற காரணம் நோக்கி விபூதி எனவும் வழங்கப் பெற்றது. மேலும் விபூதிக்கு மறுபெயர்களாக சாரம், காப்பு, பஸிதம், பஸ்மம் எனவும் பேரூர்ப்புராணம் உபதேசப் படலத்திலும் சித்தாந்த சிகாமணியிலும் கூறப்பட்டுள்ளன.

மகுடாகமத்தில், விபூதியைச் சிவமாகவே உருவகித்து ஒரு தியானம் சொல்லப்படுகிறது. முனிவரே பஸ்ம தேவருடைய ஆகிருதியைச் சொல்கின்றேன். மூன்று கண்ணுடையராயும், மூன்று சிரசுடையராயும், மூன்று கையுடையராயும், மூன்று முகங்கள் உடையராயும், மூன்று பாதங்கள் உடையராயும்,

அக்கினி கண்ணுடையராயும் பஸ்மம் பூசிய சரீரமுடையராயும், தாண்டவ ஆடம்பரராயும், பீமராயும், செவ்வரத்தை மலர் போன்ற நிறத்தினராயும், இரக்ஷாமந்திர நாயகராயும் ஆகிய (பஸ்ம) தேவரை மனிதன் தியானித்துச் சாந்தி அடைவானுக என்று கூறப்பெற்றுள்ளன[1].

மேலும் திருநீறு, காமக்கிழத்தியர்[1] மார்பில் பூசிய சாந்து காமுகரை வசீகரித்து இன்பந்தருதல் போல, தானும் மெய்யன்புடையாரை வசீகரித்து அவர்களிடத்தில் இன்பந் தோன்றச்செய்யும் என்று பல்லாண்டுப் பதிகம் பகர்கின்றது. சிவாகமங்களும், உபநிடதங்களும், உபதேசகாண்டம் முதலான பல புராணங்களும் திருநீற்றை விளைவிக்கும் முறைகளை விரிவாகப் பேசுகின்றன.

மற்றும், "திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்; தருவாய் சிவகதி என்ற திருப்பாடற்பகுதி சைவத் தெய்வத் திருநீற்றினை அணியும் முறைமையினை உபதேசிப்பதன்றி திருநீற்றினிடத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு உள்ள மன உறைப்பினையும் அறிவுறுத்துகின்றது. 'ஆன்மாக்கள் வினை நீருகும் பொருட்டு, இறைவன் நீறணிகின்றுன்' என்று, "தொழுது எழுவார் வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்" என்னும் மணிவாசகரின் திருக்கோவையார் பாடற்பகுதி உபதேசிக்கின்றது.

திருநீறு பராசத்தியின் வடிவமானது "பராவணமாவது நீறு" என்றது திருமுறை. இதனை அணிந்துகொண்டால் தீயிடைப்பட்ட விறகுபோல் வினையும் நோயும் வெந்து அவியும் என்று அருளுகின்றுர் அப்பர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருமழபாடியில் இறைவனை வணங்கி இன்னிசைத் திருப் பதிகம் பாடும்போது "தலைவனே! உன்றன் திருவடியை வந்தடைந்துள்ளேன். திருநீற்றினை மெய்யில் பூசியிருக்கின்றேன்; என்னையும் ஏற்று அருள்புரிவாயாக" என்று கூறுவதும் இங்குக் கருதத்தக்கது. மேலும் அரசுரிமையினை ஏற்குங் காலத்துத் திருநீற்றையே அபிடேகப் பொருளாகக் கொண்ட மூர்த்தி நாயனுராலும் திருநீற்றின் பெருமை நன்கு விளங்கும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருநீற்றை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் தரித்துக் கொள்ளுதல் வேண்டும். உத்தூளனமாவது திருநீற்றைத் தண்ணீரிற் குழையாமல் பூசுதலாம். திரிபுண்டரம் என்பது நெற்றி முதலான உறுப்புக்களில் நீரில் குழைத்த விபூதியை மூன்று பட்டையாக இடுவது இவற்றை அணியும்போது மந்திரம் கூறுவது சாலச்சிறந்தது. இதன் விரிவு சைவ அனுட்டான சுருக்கவிதியில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே அவரவர்களும் தாம் தாம் பெற்றுள்ள தீட்சை முறைகளுக்கேற்ப காலை, நண்பகல் மாலை இரவு ஆகிய நான்கு நேரங்களிலும் சிவாகமங்களில் கூறிய அநுட்டான முறையின்படி தரித்தல்வேண்டும்.

---

1 கண்ணுர் இளங்கொங்கையிற் செங்குங்குமம் போலும் பொடி என்பது அப்பாடற் பகுதியாகும்.

விபூதி தோத்திரம்

இப்பகுதியில் வந்துள்ள "விபூதி தோத்திரம்" என்னும் சுவடி எம் நூலகத்தில் No. 837 (e)-ஐ உடையதாகும். இந்நூல் பழநிமலை அறுமுகவனின் திருநீற்றின் பெருமையினைக்கூற எழுந்து, திருநீற்றினுல் பெருமைபெற்ற பிற வரலாறுகளையும் சுட்டிக்காட்டுகின்றன. 10 பாடல்கள் உடையது. பாடல்கள் முழுவதிலும், சிற்சில இடங்களில் தளைகள், சீர்கள் சரிவர அமையாமல் இலக்கணப் பிழைகள் மலிந்தும் காணப்படுகின்றன. இருப்பினும் என்னுல் இயன்ற மட்டும் திருத்திப் பதிப்பித்துள்ளேன். இந்நூலின் ஆசிரியர் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடாததினுல், இன்னுரென அறிய இயலவில்லை.

"சிவனைப் போற்ருத சென்மம்பாழ்", "சிவனைப்பற்றிக்கூருத சாத்திரம் பாழ்", போன்று "நீரில்லா நெற்றி பாழ்" என்று கூறுகிறது பஸ்மஜா பாலம். எனவே சைவராகப் பிறந்த மக்கள் சைவசாதனமாகிய திருநீற்றின் பெருமையை உணர்ந்து விதிப்படி சமைத்து, மந்திர தியானத்துடன் எப்போதும் தரித்துச் சிறப்படைந்தால், ஞானசம்மந்தப்பெருமான் தமது திருநீற்றுப் பதிகத்தில் அருளிச்செய்த நன்மைகள் பலவற்றையும் நாம் பெறுதல் உறுதி.

இப்பணியில் காணுங் குற்றங் குறைகளைப் பொறுத்து, நிறைவுசெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனும்.

விபூதி தோத்திரம்

(பழநிமலை அறுமுகவர் திருவெண்ணீறு)

கொண்டுகொண் டிட்டவெகு ரூபங்க ளுக்கழகு
கோலஞ் சமைத்த நீறு
கொடியயெண் ணாயிரஞ் சமணரைக் கழுவினில்
கொலைக்களங் கண்ட நீறு[1]
துண்டகண் டப்படக் கொடுவேலி யசுரரைத்
துணியவேல் தொட்ட நீறு
சொல்லரிய பூதப் பிரேதப்ப சாசுபிணி
தொடரிட் டடிக்கு நீறு
செண்டுகை மேருப் பொறித்தவன் கூன்முதுகு
செவ்வே ளணிந்த நீறு[2]
சிவனென்பி லாதமுழு மூடர் நெஞ்சந்
திடுக்கங் கொடுத்த நீறு[3]
அண்டபகி ரண்டநவ கண்டப் பிரதாப
னனுபூதியென வந்த நீறு
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே -க

சம்மந்த ராகவே தென்னவன் கூடலிற்
சமணரைப் பழித்த நீறு
சகலகுரு பரனாக அரனுக் குபதேசந்
தானா யுரைத்த நீறு
நம்பினடி யவர்களீ டேற வினையோட
நாலு நூருயிரத் தெண்ணாயிரம் நோவுகளும்
நாடாம விட்ட நீறு
கம்பமதை யானைக் கிளையகுரு நாதன்
கருத்துடன் தந்த நீறு
காலயெம தூதர்வினை நாடாம லென்னாளுங்
காக்கவே விட்ட நீறு

1 திருஞான சம்மந்தமூர்த்தி நாயனார்—பெரிய புராணம். 2 கூன்பாண்டியன்—பெரியபுராணம். 3 திடுக்கங்—?.

அம்பிகைத் திரிசூலி சுந்தரி சவுந்தரி
(அபிராமி தந்த நீறு
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே. -௨

அரவங்கள் வாய்களும் மிருகங்கள் வாய்களும்
அடைக்கவே யிட்ட நீறு
அட்டபுகழ் லெட்சுமி யிட்டமுட னெந்நாளு
மறலாம லிட்ட நீறு
இரவுபகல் மறவாமல் முருகனுட திருநாம
மென்னெஞ்சில் தரித்த நீறு
யெதிராளி நெஞ்சங் கலங்கிப் பயந்தோட
யேகமா யிட்ட நீறு
உரமான பூதப்பிரேதப் பசாசுபிணி பில்லிவஞ்சனை
சூனிய மொதுங்கவே யிட்ட நீறு
ஒன்பது நவக்கிரக மன்பாக வேயெனக்
கோதியே தந்த நீறு
அரசருடன் யானைபுலி வீரவா
யடைக்கவே யிட்ட நீறு
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே. -௩

" நூலைப் பகுந்துடைய மாதர்க்கு மேலாய
நுதலில் தரித்த நீறு
நூறு யிரஞ்சேனை வீறுக வந்தாலோர்
நொடியில் துணித்த நீறு
வாலைப் பருவமதாய் வயசுநூ றுகவே
வசீகர முமான நீறு
மாறுத செல்வமும் பேருண வாழ்வு
மகிழ்ந்துடன் தந்த நீறு
வேலைக் கடிந்துவெஞ் சூரரைக் கொன்று
வெற்றிவேல் தொட்ட நீறு
மேருவில் சென்று போதான கைமாறனை
வெதுப்புநோய் தீர்த்த நீறு[1]
ஆலவாய்ச் சொக்கருட னைந்த தாண்டவி
அகிலாண்ட வல்லிதந்த நீறு
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -௪

1 கூன்பாண்டியன் வெப்புநோய் தீர்த்தது—ஞானசம்பந்த நாயனார்—பெரியபுராணம்

" ஓராறு சென்னியு மீராறு புயமுமென்
னுள்ளத்தே நிற்கும் நீறு
ஓதுதமிழ் மதுரைதனிற் பேடியைப் பேசுவித்து
உபதேச மான நீறு
காரானை முகற்கிளைய வேலாவி ராலிமலைக்
காங்கையன் தந்த நீறு
போராடு சூருடல் கூறுக வேலாய்ப்
பொடிபடத் துணித்த நீறு
(போராநதி) மாமலை வள்ளியுட னயகன்
பொன்னடி வணங்கும் நீறு
ஆரமுட லெங்கு மணிவாசவன் தரித்த
அன்பத்தோ ரட்சரத்தின் நீறு
(ஓராவரு) மிமையவரும் போற்றியே அரன்பங்கி
லுமையவள் தந்த நீறு
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -ரு

" திருப்பரங் குன்றமுஞ் செந்திநகர் கதிர்காமந்
திருச்சோலைக் குமரன் நீறு
திருத்தணி சுவாமிமலை பழனிமலை சிக்கந்தர்மலைச்
செவ்வே ளணிந்த நீறு
விருப்பமா யூரவேளூ ராவினங்குடி குடிம்பியாமலை
வேல்னுதன் தந்த நீறு
யிருப்பான் தலமெல்லா மென்றுந் துதிப்பவர்க்
கீடேற்ற மான நீறு
யெங்கங்கே யிருந்தா லுமங்கங்கே வந்து
யீசுபரி தந்த நீறு
அருள்பாத முந்தந்து யிருப்பா யென்னெஞ்சில்
அகலாதென் னுளு (மனபால்)
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -சா

" துட்டப் பசாசுபிணி கிட்டவர வொட்டாமல்
துணிக்கவேல் தொட்ட நீறு
சொல்லரிய பூதப்ரேதப் பசாசுபிணி பில்லி
சூனியந்தொட ரிட்டெரித்த நீறு
வட்டமிடு பதினெட்டு வல்லாயிரம் வினையும்
வாராம லிட்ட நீறு
மாருத முன்வகை தனிலேந்தி வித்த
மந்திர மான நீறு

கொட்டமிடு பேய்ப்படை தட்டழிந் தோடவே
கோலஞ் சமைந்த நீறு
குறுமுனி[1] நற்கிருபை பெறுபேர் வேல்வாங்கிக்
குன்றைப் பிளந்த நீறு
அட்டதிசை பதினாறு முக்கோண சற்கோண
யறுபத்து னாலுகலையுந் (தருநீறு)
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -எ

"வேதாளப் பூதப் பிரேதப்ப சாசுகளை
விரட்டித் துணிந்த நீறு
வெண்டையந் தண்டையொடு கிண்கிணி சிலம்பசைய
வெற்றிவேல் தொட்ட நீறு
தானூப மங்களப் வள்ளியுட னயகன்
சண்முகன் தந்த நீறு
தும்புரு நாரதர் கிம்புருடர் பூத
மொதுங்கவே நின்ற நீறு
ஓம்முரு காவென்று உள்ளம் நினைப்பவர்க்
குறுதுணை யான நீறு
ஓம்நமசி வாயமெய் ஞானவெளி யாகி
யொளியாகி நின்ற நீறு
அரிதான கருவாகி யுருவாகி வெளியாக
அறுமுகவர் திருப்பாதம் நினைநெஞ்சமே
அடியவர்க் கருள்தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -அ

"எத்தேச காலமு முத்தையா வென்று
ஏழைக் கிரங்கும் நீறு
இருபத்தே ழுநட்சத்திரப் பலனுமென் னெஞ்சில்
இன்பமாய்த் தந்த நீறு
சித்திடை வள்ளியைத் தினைப்புனந் தன்னிலே
சித்தராய்ச் சென்ற நீறு
சீறிவரும் வேடர்க்குத் திருநீறு கொடுத்திடச்
சிவபத்த ரான நீறு
முத்தமி ழாகியே அருணகிரி நாதர்க்கு
மோட்சங் கொடுத்த நீறு
முப்பத்து முக்கோடி தேவர்முனி வரும்போற்றியே
முருகனென வந்த நீறு

1 வரலாறு அறியக்கூடவில்லை.

அத்தனர் பங்கிலுறை நித்திய கல்யாணி
அகலா தென்னு ளும்மெய்
அடியவர்க் கருள் தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -கூ

"பத்துக்கவியு மெநித்தமுந் துதிப்ப வர்க்குப்
பாக்கியந் தந்த நீறு
பதினாறு யிரந்திருக் கூட்ட மாகவே[1]
பாண்டியன்முன் சென்ற நீறு[2]
சித்துக்குச் சித்தாகி நின்ற திருச்
சரவணைக் குமரன் நீறு
சந்திரசே ணன்மைத் துனன்வெற்றி வேலாயுதன்
செவ்வே ளணிந்த நீறு
கத்தூரி குங்குமந் தரித்த வள்ளிக்
கண்ணுடன் மகிழ்ந்துற்ற நீறு
கார்த்திகே யன்க டம்பன் சுவாமி
காங்கையன் தந்த நீறு
அத்தனர் பங்கிலுறை நித்திய கல்யாணி
அகலாதென் னுளு (மன்பால)
அடியவர்க் கருள் தரு கிருபைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே." -ய

1 திருஞான சம்மந்தர் புராணம்—பெரியபுராணம். 2 பாண்டியன்—கூன் பாண்டியன்.

॥ वासुदेवकृत ॥

॥ सुचरिताख्यान निरूपण ॥

ஸ்ரீ பஞ்சநதீசாய நம:

வாசுதேவரின்

சுசரிதன் சரித்திரம்.

T. R. பீமராவ், மராத்திப் பண்டிதர்,
சரசுவதிமகால் நூலகம், தஞ்சாவூர்.

இந்நூல் 'சுசரிதன்' என்னும் அந்தணச் சிறுவன் ஒருவன், திருவையாற்றில் கோவில் கொண்டுள்ள பஞ்சநதீஸ்வரரை வணங்கி, சிவபெருமானின் அருளால் தனக்கு ஏற்பட்ட யமபயம் நீங்கி, சிறப்புடன் வாழ்ந்து முடிவில் சிவபதம் அடைந்த வரலாற்றைக் கூறும் கதையாகும்.

இச்சைவ புராண வரலாறு, தமிழ்மொழியில், 'திருவையாற்றுப் புராணம்', என்னும் தலைப்பில் காணப்படும் நூலில் 'இந்திராத்தியாயம்' ஆலேச்சருக்கம்' பகுதியில் 'சுசரிதன்' வரலாறு காணப்படுகிறது. இந்நூல் வரிசை எண். 366 (a) ஆகும். இப்புராணம் வடமொழியில் காணும் 'பஞ்சநதி மகாத்மியம்' என்னும் நூலிலிருந்து தமிழாக்கம் செய்துள்ளதாக, நூலில் காணும் புராணக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

அது, தஞ்சையை அரசு புரிந்த நாயக்க மன்னர் அச்சுதப்பநாயக்கர் காலத்திலும், அவர் மைந்தர் இரகுநாத நாயக்கர் காலத்திலும் அமைச்சராக இருந்த கோவிந்த தீக்ஷிதரின் வேண்டுகோளின்படி, வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது என்பது கீழே காணும் பாடலால் அறிய முடிகிறது. இத்தமிழ் நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

> *"மலிபுனல்சூழ் சோணாடு தஞ்சையிற் காத்திடு மரசர் மதியமைச்ச
> ஞெலிமறைதேர் கோவிந்த தீக்ஷதரய்யன் திருவாக் குடைமையாலே
> கலியுகத்துச் சகனாண்டு மூவைஞ் நூற்றிருபதின்மேற் காணுமேழாய்ப்
> பொலிவருடத் தையாற்றுப் புராணவட மொழிதமிழாற் புகலலுற்றேன்"
>
> *(சகம் 1527—கி. பி 1605)*

* அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் எழுதப்பட்டது.

இதேபோல் வடமொழியில் 'பஞ்சநதமகாத்மியம்' என்னும் தலைப்பில் வரிசை எண். B. 11161ல் பனை ஓலைச் சுவடியில் தெலுங்கு எழுத்திலும், வரிசை எண். B. 1783 பழமையான காகிதச் சுவடியில் தேவநாகரி எழுத்திலும் காணப் படுகின்றன. இச்சுவடிகளில் சுசரிதனின் வரலாறு நான்காவது அத்தியாயத்தி லேயே காணப்படுகின்றது.

இதேபோல் மராத்தி மொழியிலும், வடமொழி நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதிய 'பஞ்சநதமகாத்மியம்' என்னும் ஒரு சுவடி வரிசை எண். 577ல் காணப்படுகிறது. அதிலும் நான்காவது அத்தியாயத்தில் 'சுசரிதனின் வரலாறு' காணப்படுகிறது. வடமொழியிலும், மராத்தி மொழியிலும் பிர்மகைவர்த்த மகா புராணத்தில் தீர்த்த பிரசம்சையில் பஞ்சநத மகாத்மி யம் என்னும் தலைப்பில் அமைந்ததாகக் காணப்படுகிறது.

மராத்திமொழியில் வரிசை எண் 2394ல் தனியாகக் காணும் 'சுசதரிதன் ஆக்யானம்', என்னும் சுவடியிலிருந்து இது பதிப்பிக்கப்படுகிறது. இக்கதை மராத்தி இலக்கியத்தில் 'நிருபணம்', என்னும் அமைப்பில் அமைக்கப்பட்டிருக் கிறது. இக்காகிதச் சுவடி மிகவும் பழமையானதாகவும், பூச்சி அரித்தும் எழுத்துக்கள் பெரியதாகவும், சுத்தமாகவும் காணப்படுகின்றது.

இச்சிறு புராண வரலாற்றை, மராத்தி மொழியில் அமைத்தவர் பெயர் 'வாசுதேவர்' என்பவராகும். நூலில் இப்புலவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை. 'வாசுதேவ' என்ற ஆசிரியர் பெயரில் நம் நூல்நிலையத்தில் மராத்தி மொழியில் சில நூல்கள் காணப்படுகின்றன. அவைகள்:- மன்னன் சகஜியின்பேரில் 'சிருங்கார ரசப்பாடல்கள், பூஜலாதி பரீக்ஷா' முதலியன.

வாசுதேவரின் பேரில் மராத்தியில், ஸ்ரீ தேவாஜிராவ் அன்பளிப்பு வரிசை எண். 46ல் 'காலியமர்த்தன' என்னும் தலைப்பில் ஒரு காகிதச்சுவடி காணப்படு கின்றது. இதிலும் ஆசிரியரைப் பற்றிய குறிப்புகள் தென்படவில்லை. ஆகை யால் சுசரிதன் வரலாற்றை எழுதிய வாசுதேவரைப் பற்றி, செய்திக் குறிப்பு களைக் கொடுக்க இயலவில்லை.

இது மராத்தி மூல நூலில் கண்டுள்ளபடி, பிழைதிருத்தங்கள் செய்து பதிப்பிக்கப்படுகிறது. இந்நூல் நிரூபண அமைப்பான, ஸ்லோகம், ஆர்யா, சாகி, ஓவி, திண்டி, துருபத' ஆகிய மராத்தி விருத்தங்களின் வகையில் இயற்றப் பட்டிருக்கிறது. இத்துடன், மராத்தியில் இயற்றப்பெற்ற 'பஞ்சநத மகாத்மியம்' நான்காம் அத்தியாயத்தில் காணும் 'சுசரிதன்' கதையை, விபரமான கதை தெரிவதற்காக அனுபந்தமாக இணைக்கப்பட்டிருக்கிறது. மற்றும் மராத்தியிலும், தமிழிலும் கதைச் சுருக்கங்களும், முகவுரையும் எழுதி வெளி யிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், சிறப்புடன் விளங்கும் திருவையாற்றில் கோவில் கொண்டுள்ள ஐயாறப்பனின் திருவிளையாடலை விளக்கும் இச்சிறு காப்பியத்தை ஆசிரியர் தனது தாய்மொழியான மராத்தியில் தமிழ் நாட்டின் பெருமையைத் தங்களது நாட்டினரும் அறிந்து கொள்ளவேண்டும் என்கிற எண்ணத்தில் இயற்றினமைக்கு, நாம் பெருமை கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மராத்தி மொழி அன்பர்கள், இந்நூலைப் படித்துப் பயன் பெறுவர் என நம்புகிறன்.

சுசரிதன் கதைச் சுருக்கம்

கௌதமநதிதீரத்தில் 'சுதபா' என்னும் அந்தணர், தன்மனைவி சுசீலையுடன் வாழ்ந்துவந்தார். அவருக்கு, சுசரிதன் என்ற பெயருடைய ஒருமைந்தன் இருந்தான். இவ்வந்தணர் தானதருமங்கள் செய்து, சிவபெருமானிடம் ஆழ்ந்த பக்திகொண்டு வாழ்ந்துவந்தார். ஒருசமயம், தேசத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு. அங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் தங்கள் பிழைப்பைத் தேடிக்கொண்டு வேறு தேசங்களுக்குச் சென்றனர். சுதபாவும், தன்மனைவி மைந்தனுடன் பல சிவஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு, தெற்குநோக்கி வரும் சமயத்தில் வழியில் உயிர் துறந்தார். அச்சமயம், குலப்பெண்ணின் இலக்கணப்படி அவர் மனைவி சுசீலையும் தனது கணவனுடன் உடன்கட்டை ஏறினாள். இந்நிகழ்ச்சியால் மனம் நொந்த சுசரிதன் செய்வதறியாது, திகைத்து நின்று, பிறகு ஒருவாறாகத் தன்மனத்தைத் தேற்றிக்கொண்டு, பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய அந்திமக் கடன்களைச் செய்துவிட்டு, மறுபடியும் பிரயாணத்தைத் தொடர்ந்து பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, தமிழ் நாட்டில் பொன்னி நதியின் கரையில் அமைந்த திருப்பழனம் என்னும் புனித சிவஸ்தலத்தில் தங்கி, தினமும் காவிரியில் புனித நீராடி, சிவபெருமானை வணங்கி, பிக்ஷை எடுத்து உணவு அருந்தி வாழ்ந்தான். தனக்கும் பெற்றோருக்கும் ஏற்பட்ட நிலையை நினைத்து, மனம் வருந்தி "எல்லாம் ஈசன் செயல்" என்று எண்ணி அமைதியுடன் வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள், கோவிலுக்குச் சென்று வழிபட்டு வரும் வழியில், மிகவும் களைப்புற்று ஒரு மரத்தின் அடியில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த சமயத்தில் சுசரிதன் கனவில் ஒரு உருவம் தோன்றி, 'இன்றிலிருந்து ஐந்தாவது நாள், நீ உயிர் துறப்பாய்', என்று கூறியது. உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட சுசரிதன் தனக்கு ஏற்பட்ட கனவினை நினைத்து, மனதில் பயம்கொண்டு, 'நம் பெற்றோர்க்கு ஏற்பட்ட துர்மரணம் நமக்கும் வந்துவிட்டது போலும்' என்று கருதி "பிரமன் எழுத்தை அழிக்க யாரால்முடியும்?" என நினைத்து சமாதானம் அடைந்து, 'கடைசி காலத்தில் நற்பயனையாவது அடையலாம்' என்று நினைத்து, மரண பயத்தைப்போக்கும் 'காசிக்கு வீசம் உயர்வான' மகிமை கொண்ட பஞ்சநதி க்ஷேத்திரம் வந்து, கங்கையினும் புனிதமான காவிரியில் நீராடி பஞ்சநதீஸ்வரரைத் தரிசனம் செய்து, மனமுருகி வேண்டிக்கொண்டு, ஆலயத்தின் தெற்கு வாயிலில் சிவானுக்கிரக சிரேஷ்டராய் அமர்ந்து, தவமியற்றிவரும் வசிஷ்ட முனிவரைக்கண்டு, அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி, 'என்னைக் காத்தருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

வசிஷ்ட முனிவர், சுசரிதனின் வரலாற்றைக் கேட்டு, மனம் வருந்தி, 'கவலைகொள்ள வேண்டாம். நான் உனக்கு சிவபஞ்சாக்ஷர மந்திரம் உபதேசம் செய்கிறேன். அதை நீ பக்தியுடன் ஜபித்து வா. உனக்கு ஈசன் அருள் புரிவான்', என்று கூறி பஞ்சாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார்.

சுசரிதன் வசிஷ்ட முனிவர் அருளிய பஞ்சாக்ஷர மந்திரத்தை, முறையாக ஜபித்துக்கொண்டு பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தைத் தினமும் நூறுமுறை வலம் வந்து வணங்கிவந்தான். இவ்விதமாக நான்கு நாட்கள் கழிந்தன, ஐந்தாம் நாள் காவிரியில் நீராடி அனுஷ்டானம் செய்யக் கோவிலைநோக்கி வந்து கொண்டிருக்கும் சமயம், காவிரியின் தென்கரையில் யமன் மகிஷாரூடனுகித் தனது பரிவாரங்களுடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து, பயந்து, "தன் உயிரைக் கவர யமன் வந்துவிட்டான். இனி நமக்கு வசிஷ்ட முனிவரே கதி" என்று எண்ணம்கொண்டு, முனிவர் ஆச்சிரமத்தை நோக்கி ஓடிவந்து, அவர் திருவடிகளில் வீழ்ந்து விபரத்தைக் கூறினுன் வசிஷ்ட முனிவர் சுசரிதனை எடுத்து, அவனுக்குத் தைரியம்கூறி, ஆலயத்தின் தென்வாயிலுக்கு தன்னுடன் அழைத்துவந்து, அமர்ந்து பஞ்சாக்ஷர தியானத்தை இருவரும் செய்தனர்.

இந்நேரத்தில் யமதர்மன் தன் பரிவாரங்களுடன் வந்து, உரிய காலத்திற் காக காத்து நின்றான். அச்சமயத்தில் கைலாயத்தில் வீற்றிருக்கும் சிவ பெருமான், தன் பக்தனுக்கு ஏற்பட்ட நிலையை அறிந்து நந்திதேவரை அனுப்பி யமதருமனுல் ஒரு இடையூறும் ஏற்படாமல் காத்து வருமாறு அனுப்பினுர். நந்திதேவர், பஞ்சநதி க்ஷேத்திரம் வந்து வசிஷ்டர், சுசரிதன் எதிரில் தன் சூலாயுதத்தை நிறுத்திக் காத்தார்.

எமதருமன்: நந்திதேவரையும், வசிஷ்டரையும் இலட்சியம் செய்யாமல் சுசரிதன்மேல் தன் பாசக்கயிற்றை வீசினுன். அதுகண்ட நந்திதேவர் வெகுண்டு, தன் சூலாயுதத்தை யமன்மேல் வீசினுர். அதனுல் கீழே விழுந்து எமன் மரணமுற்றுன்.

சுசரிதன் தனக்கு ஏற்பட்ட மரணபயம் நீங்கியதை நினைத்து, வசிஷ்ட முனிவரை நோக்கி, 'தங்கள் அருளால் எனக்கு மரணத்திலிருந்து விடுதலை கிடைத்தது. எல்லாம் தங்கள் அருள்' என்று கூறி வணங்கி நின்றுன். அச் சமயம் வசிஷ்ட முனிவர், 'உன் குருபக்தியும், திடமான தெய்வ நம்பிக்கையுமே உன்னை மரணத்திலிருந்து காத்தது. இனி நீ மோட்சம்கிட்ட சிவபெருமானைத் துதிப்பாயாக' என்று கூறினுர்.

சுசரிதன், தான் அடைந்த பேறுக்காகச் சிவபெருமானை நினைத்து மனம் உருகித் தோத்திரம் செய்தான். சிவபெருமான் பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தின்

தெற்கு வாசலில் தோன்றி, சுசரிதனைப்பார்த்து, "உன் பக்திக்கு மெச்சினேம். இன்றுமுதல் உனக்கு பிராணதானம் செய்த வசிஷ்டரைத் தந்தையாகவும், குருவாகவும் நினைத்து வணங்கிவா" என்று கூறினர். பிறகு வசிஷ்டரைப் பார்த்து, சிவபெருமான், 'சுசரிதனுக்கு நல்ல குலத்தில் பெண்ணைத் தேர்ந்தெடுத்து, திருமணம் செய்வித்து, அனைத்துப் பேறுகளும் பெற வழிசெய்து, கடைசியில் முக்தியும்பெற வழிசெய்யுமாறு கூறிமறைந்தார்.

சிவபெருமான் கட்டளைப்படி சுசரிதனுக்கு நல்குலத்தில் பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்துவைத்து அனைத்து பேறுகளும்பெற வழி செய்தார்.

சுசரிதன் தன் கடமைகளைச் சிறப்புடன் செய்து தனக்குப்பிறந்த மைந்தனை சிறப்புடன் வாழ வழிசெய்து, இறுதியில் மறுமுறையும் பஞ்சநதி தீரத்திற்கு வந்து சீலமுடன் வாழ்ந்து முடிவில் இறைவனடி சேர்ந்தான்.

புனிதமான பொன்னி நதி பாயும் பஞ்சநதி க்ஷேத்திரம் ஆலயத்தின் தெற்கு வாயிலின் மேற்கு பகுதியில், சுசரிதனுக்குத் தரிசனம் கொடுத்து, ஜோதி ரூபமாக ஆட்கொண்டார். சிவபெருமானர் உருவம் 'ஆட்கொண்டார்' என்ற பெயரில் இன்றும் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறர். அவர் சன்னதிக்கு எதிரில் சுசரிதனுக்கு மோட்சம் கொடுத்த செயலை நினைவு கூற, இன்றும் சிவனடியார்கள் ஆட்கொண்டார் சந்நிதியின் எதிரில் உள்ள குழியில் குங்கலியத்தை இட்டு சோதி (புகை)யை உண்டாக்கித் தாங்களும் சுசரிதன்போல் முக்தி அடையவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வதைப் பார்க்கலாம்.

சுசரிதன் கதையைப் படிப்பதால், நாமும் அந்நிலையை அடைய, சிவனடியை வணங்குவோமாக.

சுபம்.

॥ श्री पंचनदीशाय नमः ॥

॥ सुचरिताख्यान निरूपण ॥

॥ वासुदेव कृत ॥

संपादक

टि. आर. भीमराव,

मराठी पंडित.

॥ सुचरिताख्यान व प्रस्तावना ॥

सुचरिताख्यान एक शिवभक्ताचे मनोरंजक चरित्र होय. सुचरित, त्याचा दृढ दैवभक्ती गुरुभक्तीने त्याला संभवलेले मृत्युभयापासून मुक्तझाला.

हे शिवभक्तचरित्र दक्षिणदेशीं तंजावरप्रांतीं कावेरीतीरांतील, पंचनदक्षेत्र ह्मणावयाचे पुण्यस्थाळांत चालूं झाले. ह्या चरित्राचे पुराणसंमतमाहिती, संस्कृतांत ब्रह्मकैवर्तमहापुराणांत, तीर्थप्रशंसांत, पंचनदमहात्म्य प्रसंगांत, चवथा अध्यायांत पाहणेस मिळतें. हे पुराण संमतीचे आधाराने वासुदेव नावाचे कवि एक स्वतंत्रग्रंथ 'सुचरिताख्यान' ह्मणून निरूपवणि रचिले अहेत. ते मूलांत आहेत्याप्रमाणे येथें प्रसिद्ध केला आहे.

हे सुचरिताख्यान कर्ता वासुदेवाचे इतर माहिती कांहीं कळत नाही. वासुदेवकवीचे नवांवर ग्रंथालयांत दोन चार ग्रंथें आढळतात. त्यांतसुदा काहीं कर्त्यांचे माहिती दिसूं येथ नाहीं. त्याकरितां वासुदेवाचे माहिती देणें कठिण आहे.

सरस्वतिमहाल ग्रंथालयांत, 'पंचनदिक्षेत्रमहात्म्य' नावाने संस्कृत, तमिळ व मराठी ह्या विभागांत ग्रंथें आहेत. त्याचे विवरण खाले दिल्याप्रमाण आहे.

१) संस्कृत - B 11161 - ताढपत्र - तेलुगु लिफि.

२) ,, - B 1783 / D 10083 - जुनि कागद - देवनागरी लिफि.

३) तमिळ - D 365 (a) - ताढपत्र - तमिळ लिफि.

४) मराठि - D 577 - कागद (यंत्र) - देवनागरीं लिफि.

हे चार पंचनदक्षेत्र महात्म्य ग्रंथांतहीं 'सुचरित आख्यान' कथाभाग, चवथा अध्यायांत आढळते.

वाचकांचे सोईसाठीं, मराठी पंचनदक्षेत्र महात्म्यांतील 'सुचरितकथा' परिशिष्ट ह्मणून ह्यांत जोडला आहे. त्यापासूत हे चरित्र सोपाने समजून येईल.

महाराष्ट्रभाषा कवीलोक, महाराष्ट्राहून हेवढे दूरराहून, हे तमिळ देशांतील शिवभक्तांचे चरित्र आपले मातृभाषेंत रचून तमिळदेशलोकांस मान्य केले आहेत आणि महाराष्ट्रदेश बंधूजनास सेवाहीं केले आहेत. ते पाहणेस अतिशय आनंद वाटतें.

महाराष्ट्र वाचक बंधूजनानी हे लहानसे विषयासक्त चरित्र वाचून ईश्वरलीलाचे महत्व जाणून त्यांचे कृपेस पात्रव्हवे हे विनंती.

भीमरावगोस्वामी.

(टि. आर. भीमराव)

॥ श्री पंचनदीशाय नमः ॥

॥ *सुचरिताख्यान ॥

॥ वासुदेव कृत ॥

श्रीमत्पंचनदीश ईश भगवान् लोकत्रयाचापती ।
ज्याचा वर्णुनिया गुणौघ थकले मौनस्थ वेदस्मृती ॥

मूर्ध्नीमंडित ज्याचिया शशिकला गंगा जगत्पावनी ।
त्या जप्येश पदांबुजीं मनजडो जो दक्षभक्तावनी ॥

शिवरूपनाथशर्मा महिमा प्रभुचा कथी स्वजा येथें ।
अनवद्या श्रवणकरी जेणें शिवपदघडे अशा हेतें ॥

होता नांदत सुतपानामक सद्विप्र गौतमीतीरीं ।
जडजीवमुक्त होती करिता मज्जनसकृज्जिचा नीरीं ॥

त्याचीप्रिया सुशील जीचा प्रेमा सदाहिं पतिचरणीं ।
तत्सुत सुचरितनामा ज्याची नामानुसरणी करणी ॥

ऐसा तो सुतपाख्यविप्र आपुल्या सद्धर्मवर्णाश्रमी ।
होता तत्पर नित्य सत्यमतीनें वर्तन होतां श्रमी ॥

मोठा सुज्ञ सुशीलहीं उपनिषद्शास्त्रार्थवेत्ता महा ।
तो अत्युग्र अवृष्टिनेंचि पडलें दुर्भिक्ष तेथें पहा ॥

*D No. 2394 - Marathi Section.

तद्देशवासी बहु कष्टि झाले
दुष्काल देखोनि मनांत भ्याले ।
अत्यंत दुःखाचि तत्याप्रदेशा
टाकोनि गेले जन अन्यदेशा ॥

त्यानंतरें हे वनि ते तिघेहीं
अन्नावीणें पीडति फार गेहीं ।
येतां असा दुष्करशोक घाला
तैं पुत्र भार्यासह तो निघाला ॥

अनेकदेशीं करूनि भ्रमण । मार्गीं सुतपानाम ब्राह्मण ।
अन्नाभावें पावला निधन । केलें सहगमन सतींनें ॥

मग मातापित्याचे यथोचित । संस्कार करोनी सुचरित ।
अंतरी होवोनि शोकार्त । पटिणार्थ निघाला ॥

जातां मातापित्याला स्मरतपंथि निघे सर्वभूग्रामदेशा ।
आला शर्वालयालंकृत पुनित महा सह्यजेच्या प्रदेशा ॥
तेथेंतेथें वसोनि सुचरित विधिनें आचरी स्नानदाना ।
तत्तत्तीरस्थ देवां नमुनि मुनिज तो ये क्रमें श्रीप्रयाणा ॥

पूर्वेसहीं पंचनदालयासी
त्याश्रीप्रयाणाख्य महास्थलासी ।
ये सह्यजे भीतरी मज्जनातें
करोनि घे त्या शिव दर्शनातें ॥

भिक्षान्ने करि भोजन जो होउनि श्रांत पंथि महा भागे ।
तो तत्रस्थ तरुतळीं झाला निद्रित तदा महा भागे ॥

परिसा पुढिला वृत्तांत सावधानें ।
देखिलें तैं दुस्वप्न विप्रजानें ॥ -१

पुरुष कश्चित्स्वप्नांत कथी त्याला ।
आजिच्या तूं पांचव्या दिनी बाळा ॥ -२

पावसीगा मृति अनृत नव्हे वाणी ।
जागृती तो होवोनि खेद मानी ॥ -३

भीतिनें त्या सह्यजा तीरमार्गें ।
निघाला तो तेथोनि मनोवेगें ॥ -४

त्वरें आला श्रीपंचनदस्थाना ।
रम्य कावेरीमाझी करी स्नाना ॥ -५

करुनि वर्णाश्रमधर्म पुण्यराशी ।
सहज लक्षी दक्षिण द्वारदेशी ॥ -६

रूप अद्भुत देदीप्यमान पाहे ।
म्हणे कोणीं हा ब्रह्मनिष्ट आहे ॥ -७

वासुदेवाची कृपा जाण पूर्ती ।
तरीच पडली दृष्टीस असी मूर्ती ॥ -८

ददर्शतत्रकावेर्या दक्षिणद्वारसन्निधौ ।
सुखासीनं मुनिं कंचित्सुनेत्रं सुस्थितं शुचिम् ॥

स्वतेजसाजगत्सर्वं भासयन्तं भयापहं ।
सर्वशास्त्रार्थ तत्वज्ञं वेदवेदांग पारगम् ॥

श्रीमत्पञ्चनदेशानं ध्यायन्तमनिशं हृदा ।
वसिष्टं जपतां श्रेष्टं दृष्ट्वा सुचरितस्तदा ॥

वंदोनिया त्या ऋषि सत्तमातें
बोले करा रक्षण भृत्य माते ।
ऐकोनि त्याची अतिदीन वार्ता
तो प्रश्न केला मुनि त्याभयर्ता ॥

बा तूं कोण किमर्थ आगमन हे कोण्या स्थळीं राहसी
कोणाचा सुत नाम काय भय कां दुःखार्तसा भाससी ।
हा वृत्तांत समग्र शीघ्र मजला तूं सांग पुण्यालया
श्री जप्येश कृपे क्षणें भय तुझें सत्काल पावेलया ॥

॥ चामरवृत्त ॥

द्विजेन्द्र बालकासि तैं मुनीन्द्र केंवि भासला
गजेन्द्र संकटी जसा खगेन्द्र वाह भेटला ।
गमोनिया परीतया नमोनि दुःख वारणा
समस्त वृत्तहीं कथी स्वमृत्युच्याहि कारणा ॥

परिसुनी असी बाल वैखरी
मुनि म्हणे तया धीर तूं धरी ।
उपजली कृपा देखुनी तुला
कथिन मी तुझ्या दुःख हेतुला ॥

वत्सा त्वां पूर्वजन्मीं कृता प्रकृतीनें भोगिलें रौरवासी ।
बारे तत्कर्म शेषें बहु खगमृग योनींत हीं जन्मलासी ॥

चंडालत्वीं असोनी तदुपरी घडली तत्कर्में विप्रताहीं ।
अतां अल्पायु तेणें तुज असति पुढें जन्म ऐसे दहाहीं ॥

त्या दशजन्मातरिहीं होसी अल्पायु बालका स्पष्टा ।
तुज जननी जनकाचा होवोनि वियोग पावसी कष्टा ॥

परि रक्षितों नभी तूं वा तुज अवलोकितां कृपा मज ये ।
कथितों उपाय तू तें जेणें लाभेल मृत्युचा विजये ॥

अद्यप्रभृति कावेर्यां त्रिकालं स्नानमाचर ।
दिवा पञ्चनदीनाथ प्रदक्षिणविधिं कुरु ॥

रात्रौ पञ्चाक्षरजपं यावत् प्रातः समाचर ।
दिवा प्रदक्षिणविधिं यावत्पञ्चदिनौवधि ॥

रुद्राध्यायं जपन्मौनी प्रदक्षिणविधिं कुरु ।
नागमिष्यति मृत्युस्ते सकाशं नात्र संशयः ॥

नियम कथनकेले ज्या क्रमे ब्रह्मनिष्टें
तदनुगुणचि तोहीं आचरी एकनिष्टें ।
दिवस ठळुनिगेले त्याहिं पांचांतच्यारी
तदुपरि पडला तो ब्रह्मचारी विचारी ॥

मग पंचमदिनीं कावेरींत स्नानादि कर्में आचरी समस्त ।
तो दक्षिणतीरीं अकस्मात रूप अद्भुत अवलोकी ॥

महोग्र महिषावरी यम सदंड आरूढला
ज्वरादि गद मृत्युचा निकट संघही देखिला ।
धरोनि भय अंतरी त्वरित ये वसिष्ठाश्रमा
नमोनि कथि सर्वहीं प्रणतकाम कल्पद्रुमा ॥

बोले मुनी धीर धरोनि वेगी
जा सह्यजेचाहिं उदीच्यभागी ।
श्री दक्षिणद्वार समीप देशी
पंचाक्षरी तूं जप एकदेशी ।।

एकांती ब्रह्मोक्तें सुचरित जपजपत बैसला जेथें ।
जो सर्वभूतनाशक आला सपरिवार तो तेथें ।।

।। सवाई ।।

कालानलोग्र अतिकालाय साद्रिनिभ कालासि देखुनि मुनी ।
कालावला हृदई कालचिया स्तवित कालासि तो प्रणमुनी ।।
आला हरूं द्विज सुताला कृतांतपरि त्यालागी दंढ करूनी ।
भालाक्ष भक्तजन पालाकरी अवन बालासि या अनुदिनी ।।

।। ध्रुपपद ।।

शंकरा अंत किति पाहसी या संकटसमई माझा ।
या अल्पवयांतचि घडला मज दुर्धर हा वनवास ।
पितृमातृ वियोगें देवा मी भोगित आहें त्रास ।।
त्यावरि हा निर्दय यमहीं आला करूं मजला ग्रास ।।

हे मृकंडुसुत भयहरणा कां नयेचि मजवरि करुणा ।।
शरणागत दीनोद्धरणा चरणाश्रित आहे तूझा ।।

बालावरि आला मोठा घाला हा करि सांभाळ ।
कां लाविसि वेळ दयाळा कालाचा असती काल ।।

हालाहल सेवुनि केला त्रिजगाचा त्वां प्रतिपाळ ।
चिल्हाळा वन जगदीशा केलें त्वां पंचनदीशा ।।

करुणामृतपूर्ण नदीशा भक्तांच्या धावसी काजा ।
स्मरतांचि पदांबुज तुझे स्वप्नीहिं न घडसी अपाय ।
माय बाप तूं दीनाचा हे ठाऊक मजला आहे ।
शरणागत ह्मणऊनि तूझा कवणाचे धरूं मी पाय ।
प्रणतार्तिहराश्रित वरदा शोकाब्जि पतित जनकरदा ।
श्रीवासुदेव विभु सहृदा तूं ब्रह्मांडचा राजा ॥

तदुपरि करुणेचा सिंधु तो नंदिकेशा
त्वरित निकट पाचारोनि केला निदेशा ।
सुचरित विधि ज्याचा शिष्य मद्भक्त पाहे
परिहिं रविसुताच्या भीतीनें ग्रस्त आहे ॥

त्वां तेथें जाउनियां आधीं तो दुष्ट काल शिक्षावा ।
तदुपरि मत्प्रिय मुनिवर चरणाश्रित विप्रबाळ रक्षावा ॥

॥ साखी ॥

नंदिकेश पदवंदूनि वेगें द्वंद्वातीत शिवाचे ।
वसिष्ठाश्रमागर्जत आला शिवशिव हरहर वाचे ।
अद्‍भुतलीला शंभूचि वर्णील कोण स्वयंभूची ॥ ध्रु. ॥

दीन बा पुढें काल मजपुढें कायकथा मशकाची ।
ज्याला पंचाननाश्रय तया भीती काम शशकाची ॥

या अत्युग्रचि शूलाग्रानें हृद्भेदीन कालाचें ।
वासुदेव हृदयस्थ कृपेने अवन करीन बालाचें ॥

जो शिवभक्तांत मुकुटरत्ने । ऐसी प्रतिज्ञा केली तेणें ।
परि ते न गणूनि महिषवाहने । केलें विंधाण तेधवा ॥

॥ धनाक्षरी ॥

वदन वासुनि विक्राळ । सर्व भक्षक तो काळ ।
पाश घालुनी तत्काळ । विप्रबाळ आकळी ॥
तेधवांचि भक्त हीर । नंदिकेश सम धीर ।
करी शूल धरूनि वीर । उभा स्थिर त्यापुढें ॥
परम चपल नंदिराव । अंतकावरि घे धांव ।
दाऊनिया क्रूर भाव । उरीं घाव दीधला ॥
हृदय होउनी विदीर्ण । ह्मणे त्राहि त्राहि शरण ।
वासुदेव सहृद्‌चरण । स्मरत अरुणसुत पडे ॥

॥ पद ॥

इतुक्यावरि भय काय देवा　　॥ प. ॥

जो सर्वांचा अंतक त्याचा
　　पडला भूवरि काय　　॥ अ प. ॥

तृण समय मद्दा गमतो
　　मजला चुकला थोर अपाय ।
प्रणतजनाचे पालन
　　करिसी शिशूला जैसी माय ॥　　-१

सदय होउनी मुनिवर गुरुनें
　　कथिला मज सदुपाय ।
वासुदेव शिव भेद न भाउनी
　　भजतो तुझे पाय ॥　　-२

बालकांची दीनवाणी । श्रवण करूनी शूलपाणी ।
जो परमात्मा कैवल्यदानी । प्रगट तत्क्षणी जाहला ॥

भालाक्ष ह्मणे बाळा भावें तूं आज वळविलास मज ।
त्राता तवा सुदाता माता तातहिं मुनीन्द्र हा समज ॥

मी कोंपतां द्विजसुता राखिल गुरूहिं दृष्टतां पाहे ।
माझेनि नव्हे रक्षण तदितर करणार कोणगा आहे ॥

वरि कुलज कन्याला वर्णाश्रम धर्मसर्व आचरगा ।
मद्भजनी हो रत मग होईल सायुज्य मुक्ति तव करगा ॥

मुनिलाहिं ह्मणे रक्षी बालक हा पुत्रसाचि भाऊन ।
उद्वाहकरी याचा अनुरूपा कन्यकेसि पाहून ॥

तदुपरि यमाकडे तो पाहे किंचित्कृपार्द्र दृष्टीनें ।
झाला सवाध उठला जैसा निर्जीव अमृतवृष्टीनें ॥

अज्ञानपराधं मे क्षमस्व करुणानिधे ।
पितापराधं क्षमते पुत्राणां परमेश्वर ॥

पिता त्वं सर्वजगतामम्बिकाजननी स्मृता ।
अपराधं क्षमस्व त्वं मया पुत्रेण यत्कृतम् ॥

बोले शंकर किंकरा आजि तुझा अज्ञापराध क्षमा ।
केला ग्या इतुक्यावरी वळखुनी पाप्यासी दंडी यमा ॥

श्रीमत्पंचनद स्थळीं वसुनियां स्नानादि कर्मे सदा ।
जे कीं आचरिती मलाहिं भजती त्यातें न बाधी कदा ॥

ब्रह्मांडनाथ कमलापति मित्र झाला
तेणें असी कथुनियां मतिमित्र झाला ।
झाला अदृश्य तवें पंचनदीश तो कीं
दीनावरी करि कृपा जसी माय तो कीं ॥

मग त्याहिं विप्र ज्याचा करवी उद्वाह मुनि शिवोक्तीनें ।
असतां निज कर्मीं रत घडलें पद अढळ ईश भक्तीनें ॥

श्रीवासुदेवचि सदाशिव होय साचा
मी बाल षट्पदहिं तत्पदसार साचा ।
त्याचीच तो वदवि मद्वदनें कथाहीं
सामर्थ्य लेश मज माझी न सर्वथाहीं ॥

असो आजि त्या शंभु सर्वोत्तमाला
मनें अर्पिलों ही कथा रत्नमाला ।
विराजो सदा त्याचि या नीलकंठी
वसो चित्तें माझेंहिं त्या नीलकंठी ॥

जो बृंदारक बृंद वंद्य नत हृन्मंदार चिंतामणी ।
कुन्देन्दुज्वल इन्दिरावर सख त्राता जगचा धणी ॥
जो कंदर्पमदांध अंधक गज ध्वंसाग्रणी धूर्जटी ।
तो जप्येश कृपाब्धि सांब विलसे सह्याद्रि कन्यातटी ॥

॥ शिवदासोपाख्यान समाप्त ॥

॥ *श्री गोविंदकवि कृत सुचरिताख्यान ॥

॥ श्री पंचनदीश्वराय नमः ॥

पुन्हा बोले नाथशर्माविप्र । प्रिये कथा सांगतों पापहर ।
जप्येशक्षेत्र महात्म्यसार । ज्यांत वारंवार बोलियला ॥ -१

गौतमीतीरीं कोण्हीं ब्राह्मण । होता सुतपा ह्मणवून ।
सुचरित त्याचा नंदन । नामानुगुण वर्तता झाला ॥ -२

सुशीला त्याचीस्त्री उत्तम । जे पतिव्रता निरूपम ।
तो मुनी करी सदा धर्म । वर्णाश्रम रत होवोनि ॥ -३

वेदवेदांत तत्व कुसरी । शास्त्र तत्वहीं जाणे अंतरीं ।
तो सुतपा गौतमीतीरीं । होता घरीं चिरकाळ ॥ -४

गौतमीतीरीं कदाचित । द्वादश वत्सर प्रमित ।
पूर्वीं अनावृष्टि जनित । दुर्भिक्ष प्राप्तझालें जनां ॥ -५

तेंव्हां तद्देशोत्पन्न जन । सर्वहीं भुकानें जाजावून ।
आपुल्या देशा ते त्यागून । गेले निघून देशांतरा ॥ -६

तेंव्हां हा सुतपा विप्रा । संगें घेवूनि स्त्रीपुत्र ।
अन्नाभावें होवोनि जेर । निघाला त्वरें तेथूनि ॥ -७

स्त्रीपुत्रांसवें ब्राह्मण । करोनि नाना देशाटन ।
मग झाला तो कालाधीन । अनुगमन स्त्रीनें केलें ॥ -८

---

*D No. 577 - पंचनदमहात्म्ये अध्याय - ५—८,

सुचरित सुतपाचा पुत्र । मायबापांचा करोनि संस्कार ।
क्रमें पावोनि पंचनदक्षेत्र । केला उद्धार मृत्युजय ॥ -९

अनवद्या वदे वैखरी । सुतपाचे सुतें कैसापरी ।
जिंकिला यमदंडधारी । जप्येशक्षेत्रीं सांग नाथा ॥ -१०

नाथशर्मा म्हणे तें ऐकोनी । मृत्यु जिंकिला केंवि त्यास्थानी ।
सर्व सांगतों ऐक भामिनी । एकाग्रमनीं होवोनिया ॥ -११

मायबाप पावतांचि अंत । त्या दुःखें सर्वदेशीं फिरत ।
तो पावला कावेरीतीरातें । जो अलंकृत शिवक्षेत्रीं ॥ -१२

कावेरींत करोनि स्नान । तीरस्थ शिवालयें पावन ।
तो सेवीत क्रमेंकढून । श्रीप्रयाणस्थला गेला ॥ -१३

पंचनदक्षेत्रास पूर्वेस । ते सुक्षेत्र असे सरस ।
कावेरीस्नान करोनि सु यश । वेवोनि गिरीश दर्शनहीं ॥ -१४

स्व वर्णाश्रमास विहित । नित्यकर्में सारोनि समस्त ।
